# சோஷலிஸம்

## தத்துவமும் நடைமுறையும்

1989
11




மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின்

72-வது ஆண்டு விழாவை உலகின் முற்போக்கு

மனிதகுலம் கொண்டாடுகிறது.

11

(166)

நவம்பர் 1989

# சோஷலிஸம்

## தத்துவமும் நடைமுறையும்

சோவியத்
மாதாந்த
மஞ்சரி

- அரசியல்
- பொருளியல்
- வாழ்வும் பணிகளும்
- வரலாற்று அனுபவம்
- உலகப் புரட்சிகர நிகழ்வுகள்
- சர்வதேச உறவுகள்
- சித்தாந்தப் போராட்டம்

நொவஸ்தி
செய்தி
நிறுவனத்
தயாரிப்பு

சோ.சோ.கு.ஒ. தூதரகத் தகவல் பிரிவின் சார்பில் அச்சிட்டு வெளியிடுபவர்: ஏ. ஓ. வொல்கோவ் 54, வார்ட் பிளேஸ், கொழும்பு-7. தொலைபேசி; 693065.

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| **இன்றைய விவகாரங்கள்** | **அயல்துறைக் கொள்கையும் பெரஸ்த்ரொய்காவும்** | 03 |
| **சமாதானம், படைக் குறைப்புக்கான வாய்ப்புக்கள்** | லரிஸா விதவிச்சென்கோ<br>இயற்கையைப் பாதுகாப்பது இன்றியமையாதது | 11 |
| **மார்க்ஸியம்-லெனினியமும் எமது காலமும்** | அக்டோபர் புரட்சியும் விமோசன இயக்கமும் | 14 |
| | பேராசிரியர் ஒலெய்க்லாமின்<br>தார்மீக நெறியின் புத்தாக்கம் | 18 |
| | உலகப் புரட்சியின் கதிப்போக்குகள் | 21 |
| **சோவியத் சமுதாயம்: சாதனைகளும் பிரச்னைகளும்** | ஏ. மிக்ரன்யான்<br>சமுதாயமும் அரசும் | 25 |
| | கொன்ஸ்தாந்தின் வார்லமேசவ்<br>மக்களின் சோஷலிஸ சுய-அரசாங்கம் | 37 |
| | வெலேரி தெலிஜின்<br>சட்டத்தால் ஆளப்படும் அரசின் மார்க்கத்தில் | 41 |
| | மக்கள் பிரதிநிதிகளின் காங்கிரஸ் | 44 |
| | சோவியத் பொருளாதாரத் திட்டங்களும் எதார்த்தங்களும் | 47 |
| **சோஷலிஸமும் இன்றைய உலகும்** | பேராசிரியர் எம். மொனின்<br>சோஷலிஸ உலகம் | 51 |
| **இளைஞர் உலகம்** | ஒறு ராக்கோவ்ஸ்காயா<br>பொருளாயத நலவாழ்வும் இளைஞரும் | 56 |
| | சோவியத் இளைஞரின் உரிமைகள் | 60 |




# அயல்துறைக் கொள்கையும் பெரஸ்த்ரொய்காவும்

**சோவியத் அயல்துறை அமைச்சரும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் அரசியல் குழு உறுப்பினரும் சுப்ரீம் சோவியத் பிரதிநிதியுமான எட்வர்டு ஷெவர்னாத்ஸே சுப்ரீம் சோவியத் கூட்டத்தொடரில் ஆற்றிய உரையின் சுருக்கத்தை வாசகர்களுக்கு வழங்குகிறோம்.**

அயல்துறை அமைச்சு 1985ம் ஆண்டுக்கும் 1989ம் ஆண்டுக்கும் இடையே சோவியத் அயல்துறைக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்ட விதம் குறித்த ஒரு மீளாய்வை வரைந்திருக்கிறது. லெனினுடைய காலத்தில் சோவியத்துக்களின் காங்கிரசுக்கு அயல்துறைக்கான மக்கள் கமிஸாரகம் (அமைச்சு) வருடந்தோறும் அறிக்கைகள் சமர்ப்பித்தது. அந்த நடைமுறைக்கு இப்போது நாம் திரும்பியிருக்கிறோம்.

எம்முடைய இந்த முதல் அனுபவத்தில் உங்களின் புரிந்துணர்வை நாம் விழைகிறோம்: அதன் சில பகுதிகளில் தவறுகள் நேர்ந்திருக்கலாம்.

எவ்வாறாயினும், எம்முடைய அயல்துறைக் கொள்கையின் முக்கியமான திசைவழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு இதுவரை என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பது பற்றிய ஒரு சித்திரத்தை அது வழங்குகிறது.

சுப்ரீம் சோவியத்தில் ஆற்றப்படும் இத்தகைய முதலாவது உரை இதுவாகையால், பொதுவான அம்சங்கள் பலவற்றை இங்கு முன்வைப்பதைத் தவிர்க்க முடியாது; இதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என நினைக்கிறேன்.

சர்வதேசச் செயற்பாடுகள் ஒரு விரிவான துறை. இங்கு நாட்டின் அரசியல் தலைமையும் மக்கள் பிரதிநிதிகள் காங்கிரஸும் சுப்ரீம் சோவியத்தும் அரசாங்கமும் தம்முடைய கொள்கையின் முக்கியமான திசைவழிகள், அரசின் நெறிப்போக்கு, உலகின் நிகழ்வுகளுக்கு அதனது கோட்பாட்டு ரீதியிலான மனோபாவம் ஆகியவற்றைத் தீர்மானிப்பதோடு மாத்திரமன்றி, அயலுறவுகளுடன் சம்பந்தப்பட்டுள்ள பல முகவர் ஸ்தாபனங்களது பணியையும் திசைப்படுத்துகின்றன. சாதிக்கப்பட்டுள்ள அனைத்துமே கூட்டு முயற்சிகளின் பெறுபேறு ஆகும்.

உங்களிடம் தரப்பட்டிருக்கும் அறிக்கை, அமைச்சகத்தினுடைய செயல்பாட்டின் எல்லா அம்சங்களையும் பற்றிய ஸ்தூலமான தகவலை உள்ளடக்கியிருக்கிறது; அயல்துறைக் கொள்கை, அதன் தத்துவம், குறிக்கோள்கள், பெறுமானங்கள், ஒழுக்கவியல், தார்மீக நெறி ஆகியவற்றின் சாராம்சத்துடன் சம்பந்தப்பட்டுள்ளது.

புதிய அரசியல் சிந்தனை என நாம் அழைப்பதுடன் சம்பந்தப்பட்டுள்ள வகையினங்களே இவை. இதன் மூலம், நாம் உலகம் பற்றியும் எமது காலம் பற்றியும் எம்மைப் பற்றியுமான கருத்துக்கள், கண்ணோட்டங்களின் ஒட்டுமொத்தத்தையே பொருள்படுத்துகிறோம். வாழ்வின் பொருள் பற்றியும், மானுட நாகரிகத்தின் ஜீவிதத்தினது புதிய எதார்த்தங்களில் அரசியலின் கடமைகள் பற்றியும் மேற்கொள்ளப்பட்ட ஆழமான, சர்வாம்சம் தழுவிய பகுப்பாய்வின் விளைவாகவே அவை தோன்றியுள்ளன.

புதிய அரசியல் சிந்தனை பற்றிய கருத்துக்களும் கோட்பாடுகளும் மிகையில் கொர்பச்சேவின் உரைகளிலும் எமது ராஜ்யத்தின் அயல்துறைக் கொள்கைத் தாக்கீதுகளிலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.



அயல்துறைக் கொள்கை பற்றிய எம்முடைய உரையாடல் பெரஸ்த்ரொய்காவின் தீர்க்கமான கட்டத்தில், நாட்டினது வருங்காலத்தின் ஒரு திருப்புமுனையில் இடம் பெறுகிறது.

சமீபத்தில் நியூயோர்க்கில் நான் உரையாற்றும்போது, எம்முடைய சமுதாயத்தின் வளர்ச்சியிலும் மேலும் முக்கியமாக அதனை வலுப்படுத்துவதிலும் சுப்ரீம் சோவியத்தின் இரண்டாவது கூட்டத் தொடரினதும் மக்கள் பிரதிநிதிகளது இரண்டாவது காங்கிரஸினதும் விசேட முக்கியத்துவத்தைக் குறிப்பிடும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன்.

## உள்துறைக் கொள்கை அம்சங்கள்

பெரஸ்த்ரொய்காவின் உள்துறைக் கொள்கை அம்சங்கள் பற்றி பேசுவது அவசியமானதென நான் கருதுகிறேன்; ஏனெனில், உள்துறைக் கொள்கையையும் அயல்துறைக் கொள்கையையும் பிரிப்பது அசாத்தியமானது மாத்திரமன்றி அதிகம் அபாயகரமானதுமாகும்.

நாம் எம்மைச் சுற்றியுள்ள உலகை உதாசீனம் செய்யக்கூடியவையும் ஏனையோரின் நலன்களைக் கருத்தில் கொள்ளாதவையுமான கருத்தமைப்புகளுக்காக எமது மக்களும் சோஷலிஸமும் அரும் விலைகளைக் கொடுத்துள்ளனர்.

இன்றைய உலகின் இடைச்சார்பு மற்றும் ஐக்கியத்தின் அதிகமான விஸ்தாரத்தை உணர்ந்து கொள்வதுதான் புதிய அரசியல் சிந்தனையின் தூண்களில் ஒன்றாகும்.

எம்முடைய பெரஸ்த்ரொய்காவின் சர்வதேச முக்கியத்துவம் பற்றி நாம் அடிக்கடி பேசுகிறோம். ஆனால், உலகிற்கு அது எவற்றை உண்மையிலேயே தருகிறது என்பதை எப்போதும் உணர்ந்துள்ளோமா?

## ராஜதந்திரத்தின் உரிமை

இங்குதான் ராஜதந்திரம் தனது முடிவைத் தெரிவிக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறது; ஏனெனில், அது, அரசு அமைப்பில் ஓர் விசேட அம்சமாக விளங்குகிறது. ராஜதந்திரத்தின் மூலமே, எமது நாட்டின்பாலான மனோபாவத்தையும், வெளிநாடுகளில் மாத்திரமன்றி உள்நாட்டிலும் கூட நாம் என்ன செய்கிறோம் என்பது பற்றிய மனோபாவத்தையும் நாம் நிர்ணயிக்கிறோம். பண்பாடான உலகின் ஓர் பகுதியாக நாம் இருக்கவேண்டுமானால், உலகில் எம்முடைய சொற்களும் செயல்களும் வரவேற்கப்படுகின்ற விதத்தை நாம் நிச்சயம் கவனத்திற்கு எடுத்துக் கொண்டாக வேண்டும்.

நிலவிவரும் சர்வதேச அபிப்ராயம், சட்ட, தார்மீக மற்றும் ஒழுக்கநெறித் தரங்களுக்கு எம்முடைய நிலைப்பாடுகளும் அணுகுமுறைகளும் செயற்பாடுகளும் வேறுபடுகின்ற தருணம் பற்றி அதற்கு முன்பதாகவும் கூடுதல் துல்லியமாகவும் அதியுயர் அதிகார உறுப்புகளுக்கு ராஜதந்திரம் அறிவிக்க முடியும், அறிவித்தாக வேண்டும்.

## நமது நாடும் உலகும்

எமது நாட்டுக்கும் அதன் எதிர்காலத்துக்கும் கருத்தாழமுள்ள பின்விளைவுகளைக் கொண்டுவரும் நிலைமைகள் தோன்றும் தருணத்தில் அது எச்சரிக்கையைக் கொடுக்க வேண்டும்.

எமது நாடு உலகில் ஆறிலொரு பங்காகும் அதில் நடைபெறும போக்குகள் உலக நிலைமையில் தாக்கத்தை ஏற்படுத்தாமல் இருக்க முடியாது; ஏனைய நாடுகளின் அக்கறைக்கும் கவனத்துக்குமுரிய விஷயமாக இல்லாமல் இருக்க முடியாது. இப்போக்குகள் மனித குலத்தின் எதிர்காலம் மீதும், இதுவரை கண்டறியாத சவால்கள், அச்சுறுத்தல்களுக்கு—நியூக்லியர், புவியமைவியல், இனமரபியல் மற்றும் பொருளாதார அச்சுறுத்தல்களுக்கு—அது முகங்கொடுக்கும் நிலைமைகளில் அதன் ஜீவிதத்துக்கான சந்தர்ப்பங்கள் மீதும் ஓர் நேரடியான தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன என்பதுமே காரணமாகும்.

உலகின் மக்கள் எம்முடைய பெரஸ்த்ரொய்காவுடனும், சமாதானத்துக்கும் உலகப் பிரச்னைகளின் தீர்வுக்கும் பொது நலவாழ்வின் மேம்பாட்டுக்குமான தமது நம்பிக்கைகளுடனும் இணைக்கின்றனர்.

பெரஸ்த்ரொய்கா கருத்தமைப்பும் அதன் குறிக்கோள்களும் இலட்சியங்களும் சர்வதேச சமாஜத்தின் மத்தியில் விரிவான, மனப்பூர்வமான ஆதரவைப் பெற்றுள்ளன.

எம்முடைய உள்துறை வாழ்வின் சில அம்சங்கள் குறித்தும் விமர்சனத்துக்கும் ஆக்கபூர்வமான பணிக்கும் இடையிலான விகிதாசாரமின்மைகள் குறித்தும் உலகில் இருந்துவரும் அவதானிப்பு குறித்து நாம் அறிவோம்.

## தூவானம் அல்ல

ஆயினும், எமது பெரஸ்த்ரொய்கா ஒரு தூவானம் அல்ல என்பதிலும் அதன் குறிக்கோள்கள் சாதிக்கப்படக்கூடியவை என்பதிலும் துறைபோகிய அரசியல்வாதிகள் நம்பிக்கை கொண்டுள்ளனர். அவர்கள் இதில் நீண்டகால நம்பிக்கையை வைத்திருப்பதுடன், நீண்டகால அரசியல் ஆதாயங்களுக்கு முதலீடு செய்கிறார்கள் என்றும் நான் கூறுவேன்.

நாம் இன்று பகிரங்கமாகப் பேசுகிறோம், எமது சிரமங்களையும் பிரச்னைகளையும் வெளிப்படுத்துவதையிட்டு நாம் வெட்கப்படவில்லை. ஏனைய நாடுகளிலுள்ள மக்களும் சம அளவில் சுதந்திரமுள்ளவர்களாக இருக்கிறார்கள், பெரஸ்த்ரொய்கா பற்றிய தமது நினைப்பை எமக்குத் தெரிவிக்கிறார்கள்.

அதன் கருத்தமைப்பும் திசைவழியும் நடைமுறைப்படுத்தலுக்கான மார்க்கங்களும்—ஜனநாயகம், கிளாஸ்னஸ்த், சம்பாஷணை ஆகியன இருந்தபோதிலும்கூட—உறுதியானவை, சரியானவை என்று கருதப்படுகின்றன. எம்முடைய



மக்களின் அறிவுத்துறை மற்றும் தார்மீகச் செல்வம், எமது நாட்டில் வாழும் அனைத்து தேசிய இனங்களதும் அனைத்து பிராந்தியங்களதும் உயர்ந்த அபிவிருத்தித் தரம், சக்தி வாய்ந்த உற்பத்தி உள்ளாற்றலின் நிலவல், எமது தொழிலாளர் அணியின் தகுதியும் உயர்ந்த கல்வித்தரங்களும் வளர்ச்சியுற்ற, விரிவார்ந்த ஆராய்ச்சி மேற்கட்டமைப்பும் எமது மகத்தான இயற்கைச் செல்வாதாரங்களும்—ஆகிய பெரஸ்த்ரொய்காவின் நம்பகமான அஸ்திவாரத்தைப் பற்றி வெளிநாட்டு நோக்கர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

நான் ஒரு கம்யூனிஸ்ட் என்ற வகையிலும் ஒரு பிரஜை என்ற வகையிலும் மாத்திரம் இவற்றைப் பற்றி பேசவில்லை; ஆனால். பெரஸ்த்ரொய்காவுக்கும் அதன் பிரச்னைகளுக்கும் வாய்ப்புகளுக்கும் வெளியே, உலகில் நாட்டின் கருத்தாழமுள்ள அயல்துறைக் கொள்கை பற்றியோ அல்லது நாட்டின் நிலை பற்றியோ இன்று பேசவே முடியாது என்பதனாலும் நான் பேசுகிறேன்.

பெரஸ்த்ரொய்கா, எம்முடைய அயல்துறைக் கொள்கைக்கு அதியுயரிய கடமைகளை முன்வைக்கிறது. அவை, ஏனைய கொள்கைக் குறிக்கோள்களை உய்த்துணர்வதிலும் கூடுதல் முற்போக்கான கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பதிலும், சொற்களுக்கும் செயல்களுக்கும் இடையிலான வித்தியாசங்களைத் தடுப்பதிலும் எமது பணியின் பாணியையும் முறைகளையும் மாற்றியமைப்பதிலும் அடங்கியுள்ளன.

சோஷலிஸமும் சோவியத் யூனியனும் உலகில் வகிக்கும் இடம் பற்றிய பிரச்னைகளுக்கும் நலன்களதும் பெறுமானங்களதும் முதன்மைகளதும் பரஸ்பர உறவு பற்றிய பிரச்னைகளுக்கும் பெரஸ்த்ரொய்கா புதிய அர்த்தத்தைக் கொடுக்கிறது; வேறு வார்த்தையில் சொன்னால், முற்றிலும் புதிய அயல்துறைக் கொள்கையின் அவசியத்தைப் பெரஸ்த்ரொய்கா நிர்ப்பந்திக்கிறது.

இக் கொள்கை பற்றிய அபிப்ராயங்களும் அதற்கு வெளிநாடுகளில் கிடைக்கும் வரவேற்பும் பெரஸ்த்ரொய்கா முரணற்றதா, இல்லையா, பின்தள்ள முடியாததா, இல்லையா என்பதன் மீதே நேரடியாகச் சார்ந்திருக்கின்றன.

## தோற்றமும் பரிணாமமும்

இங்கு பெரஸ்த்ரொய்காவின் தோற்றம் மற்றும் பரிணாமம் பற்றிய எனது அபிப்ராயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். அது வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாதது; இருப்பினும் அதன் நடைமுறைப்படுத்தலுக்குத் திட்டவட்டமான நிலைமைகள் அவசியம்; பிரதானமாக சோவியத் சமுதாயம் முழுவதன் விருப்பமும் சாத்தியமான சீர்திருத்தங்களின் நோக்கத்துக்கும் வாய்ப்புக்குமான அதன் ஒப்புதலும் அவசியம்.

பெரஸ்த்ரொய்கா மிகப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிறது என்றாலும் அது ஒருபோதும்

பின்செல்லாது என்பதை நாம் உத்தரவாதம் செய்ய முடியும். இது எமது அயல்துறைக் கொள்கைக்கு இன்றியமையாதது.

சோவியத் யூனியன் சர்வதேசியத்தையும் தேசியத்தையும் இணைப்பதிலேயே தனது முக்கியமான ஆர்வத்தைக் காண்கிறது. எனவே, நாம் சர்வவியாபக மானுட நலன்கள் பற்றி பேசமுடியும்.

## மானுடத்துவ மாற்றம்

அதியுயர்ந்த ஜனநாயகத் தரங்களின் மார்க்கத்திலான திசையுடைய மெய்யான ஜனநாயக, சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ராஜ்யத்தில் வாழ்கிறோம் என்பதில் நாம் நிச்சயமாக இருக்கும்போதுதான், சர்வதேச உறவுகளில் மானிதத்துவமான மாற்றம் பற்றி பேசமுடியும்.

சோவியத் ராஜ்யத்தில் ஓர் உறுதியான சட்டத்துவத்திலிருந்து, உள்விவகாரங்களில் படைபலப் பிரயோகத்தை அது உறுதியாக மறுப்பதிலிருந்து முன்சென்று நாம் வன்முறையில்லாத உலகுக்குக் கோரிக்கை விடுக்க முடியும், வலியோரே உயர்ந்தோர் என்ற கோட்பாட்டின் மீது சட்டத்துவத்தின் வெற்றிக்கும் கோரிக்கை விடுக்கமுடியும்.

உள்துறைக் கொள்கைகளில் உள்ளார்ந்ததாகவுள்ள பெறுமானங்களையும் கோட்பாடுகளையும் அரண்செய்யும் அத்தகைய அயல்துறைக் கொள்கைகள் மாத்திரமே செயலூக்கலுள்ளவையாக விளங்கமுடியும்.

இறுதி ஆய்வில், உள்துறை, அயல்துறை விவகாரங்களின் ஐக்கியமும் இடைச்சார்புமே சர்வதேச சமூகத்தில் ஒவ்வொரு நாட்டினதும் நிலைமையை நிர்ணயிக்க முடியும்.

உள்நாட்டுப் பிரச்னைகளைக் கையாள்கையில் வெளிவிவகார அமைச்சு கூடுதல் செயலூக்கமுள்ளதாக இருக்கவேண்டும். சர்வதேச விவகாரங்களுக்கான குழுவில் நடைபெற்ற அவதானிப்புகளின்போது இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது, ராஜதந்திரத்தின் பணி மற்றும் கடமையுடன் தொடர்புடைய, கோட்பாடு சார்ந்த விஷயம். ஒரு புறத்தில், எமது நாட்டின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதும் தேசிய நலன்களைப் பாதுகாப்பதும் இந்த நலன்கள் மற்றும் இந்தக் கொள்கை பற்றிய பிழையற்ற தார்மீக அடிப்படையில் உறுதிவாய்ந்த கருத்துக்களை உருவாக்குவதும் தான் இப்பணியும் கடமையும் ஆகும்.

## "தார்மீக உறுதி"

''தார்மீக அடிப்படையில் உறுதி'' என்ற சொற்களை நான் விசேடமாக வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். எந்தத் தேசிய நலனும் ராஜ்ய நலனும், அவை பயனீட்டுக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில் உறுதியாக இருந்தாலும், அவை தார்மீக ரீதியானதாக இல்லாத பட்சத்தில் ஓர் அரசியல் தீர்மானத்தையோ அல்லது ராஜதந்திர நடவடிக்கையையோ நியாயப்படுத்த முடியாது.



அமைச்சர் என்ற வகையில் ஒவ்வொரு சட்டபூர்வமான தீர்மானத்துக்கும் நான் இணங்குவேன். இருப்பினும், தார்மீக அல்லது அரசியல் காரணங்களுக்காக எந்தவொரு முடிவையும் நான் ஏற்றுக் கொள்ள முடியாதபோது ராஜிநாமா செய்யும் உரிமையைப் பெற்றிருக்கிறேன்.

புதிய அரசியல் சிந்தனை எமது நடத்தைக்கான ஒரு புதிய பெறுமான துலாக்கோலையும் புதிய மூலப் பிரமாணத்தையும் கொடுத்திருக்கிறது. சோவியத் யூனியன் இப்போது முதல் சர்வவியாபக மானுடப் பெறுமானங்கள் மூலம் வழிகாட்டப்படும் என்று அது பிரகடனம் செய்திருக்கிறது.

எமக்குத் தூண்டுதலை அளிப்பதற்குச் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கருவிகள் உள்ளன; பிரதானமாய் அவை, ஐ. நா. சாசனமும் பெரும்பாலான நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டு, அவதானிக்கப்பட்டு வரும் பிரகடனங்களும் உடன்பாடுகளும் ஒப்பந்தங்களும் தீர்மானங்களும் ஆகும்.

## நாட்டிற்கு எதிராக..

சோவியத் யூனியனின் ஒரு குறிப்பிட்ட செயலை நூற்றுக்கும் அதிகமான ஐ. நா, உறுப்பினர்கள் கண்டித்துள்ளனர். நாம் உலக சமூகத்திற்கு எதிராக எமது நாட்டை அமர்த்தினோம், சர்வதேச ஒழுங்கு நெறிகளையும் சர்வவியாபக மானுட நலன்களையும் மீறினோம் என்பதைக் காண இதைவிட எமக்கு வேறென்ன தேவை?

நான் ஆப்கானிஸ்தானில் சோவியத் துருப்புக்கள் ஈடுபடுத்திவைக்கப்பட்டதையே உண்மையில் பொருள்படுத்துகிறேன். நாம் எம்முடைய தேசிய சட்டவாக்கத்தையே அப்பட்டமாக மீறினோம்: கம்யூனிஸ, குடிமகனுக்குரிய நெறிகளையும் ஒழுக்கநெறிகளையும் மீறினோம் என்பதைக் கூறவும் வேண்டுமோ? இது எமக்கு ஒரு கடுமையான படிப்பினையைத் தந்தது.

அவ்வேளையில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் அரசியல் குழுவினது மாற்று உறுப்பினராக இருந்தேன் என்பதால்தான் இவை அனைத்தையும் நான் கூறுகிறேன். நான் மிகையில் கொர்பச்சேவுடன் இருந்தேன்; பத்திரிகை, வானொலி மூலமே நாம் நிகழ்வுகளை அறிந்து கொண்டோம். எமது நாட்டுக்குத் தீய பலனைக் கொண்டு வந்த இம்முடிவு, கட்சிக்கும் நாட்டிற்கும் தெரியாமல் துரோகத்தனமாக எடுக்கப்பட்டது.

சோவியத் துருப்புக்கள் வாபஸ்பெறப்பட்டதன் பின்னரான நிகழ்வுகள், ஆப்கான் தேசிய சக்திகளே தம்முடைய

நாட்டின் தலைவிதிக்குப் பொறுப்பாக இருக்கமுடியும் என்பதைக் காட்டுகின்றன.

## கடமைப் பொறுப்புக்கள்

சர்வதேச உறவுகளுக்கான எமது அணுகுமுறையில் நாம் மாற்றங்களைச் செய்யும்போது, தற்போது இருந்துவரும் பரஸ்பரக் கடமைப் பொறுப்புக்களைக் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாமல் இருக்கமுடியாது.

உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள், உடன்பாடுகளை அவதானிப்பது சர்வதேசச் சட்டத்தின் ஓர் மூலைக் கல்லாகும்.

புதிய சிந்தனை நிலையான பெறுமானங்களின், நேர்மை, விசுவாசம், பண்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கிறது.

தான் எத்தகைய சிக்கலான, பொறுப்புவாய்ந்த கடமைகளை எதிரிடுகிறது என்பதை அமைச்சு காண்கிறது. எம்முடன் நேயபூர்வமாகவும் நெருக்கமாகவும் உள்ள சோஷலிஸ நாடுகளுடன் சோவியத் பிணைப்புகளது அமைப்பு முழுவதற்கும் புதிய முனைப்பான கோட்பாடுகளை அது கொடுக்க வேண்டியிருக்கிறது.

இச் சோஷலிஸ நாடுகளின் அரசியல் அரங்கில் புதிய மாற்றுச் சக்திகள் தோன்றி வருகின்றன. அவை, எவரொருவராலும், முன்தள்ளப் படுவதில்லை; அவை மக்களுக்கு என்பதாலேயே தோன்றுகின்றன. இந்த நாடுகள் எமது அயலவர்களாகவும் நேசசக்திகளாகவும் அல்லது நண்பர்களாகவும் இருக்கப்போவதில்லை என்று இதன் பொருளல்ல.

எமது கடமைப் பொறுப்புக்கள் யாவும் நடைமுறையில் இருக்குன்றன.

விவேகமுள்ள அயல்துறைக் கொள்கை, நாட்டின் நலவாழ்வுக்கும், தேசத்தின் தார்மீக, பௌதிக ஆரோக்கியத்துக்கும், ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒவ்வொரு தனிநபருக்கும் நேரடியான பங்குப்பணியாகும்.

★

சமாதானம்,
படைக்குறைப்புக்கான
வாய்ப்புகள்

**பிரச்னைகளும் கருத்துக்களும்**

லரிஸா விதவிச்சென்கோ
தத்துவவியலாளர்

# இயற்கையைப் பாதுகாப்பது இன்றியமையாதது

**புதிய அரசியல் சிந்தனையின் வளர்ச்சியில் முக்கியமான திசைவழிகளில் ஒன்று, பந்தோபஸ்து பற்றிய ஆழமான விளப்பமாகும்; இது புவியமைவியல் பந்தோபஸ்து உள்ளிட நவீன சமுதாயத்தின் ஜீவாதாரச் செயற்பாட்டினது வெவ்வேறு அம்சங்களைத் தழுவியது.**

நியூக்லியர் ஆபத்தோடு ஒப்பிடும்போது, புவியமைவியல் ஆபத்து குறித்து சோவியத் யூனியனிலும் உலகம் முழுவதிலும் மிகக் குறைவாகவே மதிப்பீடு செய்யப்பட்டது என்பது வருந்தற்குரிய விஷயம். புவியமைவியல் பிரச்னைகளைக் கையாள்வதற்கான அவசியத்தை எதார்த்தம் அதிகரித்த அளவுக்குச் சுட்டிக் காட்டுகிறது. உலகம் முழுவதிலும் சுமார் 10 மில்லியன் தொன் பாரம்பரிய எரிபொருள் அகழப்பட்டு, போக்குவரத்து செய்யப்பட்டு, களஞ்சியப்படுத்தப்பட்டு விசைத்துறையில் பயன்படுத்

தப்படுகிறது என்ற உண்மையைக் கருத்திற்கொள்ளும்போது, பாரிய தொழில்துறை விபத்துக்களின் அழிவுகரமான பின்விளைவுகள் இராணுவ அச்சுறுத்தலுடன் ஒப்பிடக்கூடியது. நியூக்லியர் ஆயுதப் பாசறையுடன் ஒப்பிடுகையில், அது எரியவும் வெடிக்கவும் கூடிய பொறுண்மையாகும்.

நிகழலாம் என கருதப்படும் விபத்துக்கள் மாத்திரமன்றி, சுற்றுப்புறச்சூழல் மற்றும் மானுட சௌக்கியத்தின் மீது நவீன பொருளாதாரப் போக்குகளின் அதிகரித்த அளவுக்கு உள்ளியல்பாக்கும் தாக்கம் உள்ளது. சமுதாயத்துக்கும் இயற்கைக்கும் இடையிலான இடைச் செயற்பாட்டின் தனியொரு அமைப்பு பற்றிய கருத்தமைப்பை வகுக்கையில், இருபதாம் நூற்றாண்டில், புவியியற் சக்திகளது தாக்கத்துடன் வீச்சிலும் ஆழத்திலும் ஒப்பிடக்கூடிய தாக்கத்தை மனிதகுலம் உற்பவிக்கவில்லை என்று பேரவையாளர் வி. ஐ. வெர்னாத்ஸ்கீ எழுதினார்.

## ஆபத்தை உணர்ந்து . . .

இப்போது ஆயுதப் படைகளும் படைக்கலங்களும் குறைக்கப்படுவதுடன் புவியமைவியல் ஆபத்து, அதன் காலோசிதத் தன்மையிலும் பரிமாணத்திலும் முன்னணிக்கு வரமுடியும். இப்பிரச்னைக்குத் தீர்வுகாண நாம் உடனடியாக ஏதாவது செய்யாவிட்டால் முன்னுள்ள தலைமுறையினர் வாழ்வதற்கு எமது கோள் பொருத்தமற்றதாக இருக்கும் என்று புகழ்பெற்ற நோர்வேஜிய அறிஞரும் பயணியுமான டீ. ஹெய்யர்தஹால் 1980ம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் எழுதினார்.

புவியமைவியல் பந்தோபஸ்து சர்வ-மானுடத் தேவை. ஒரு நாட்டில் சுற்றுப்புறச்சூழல் அசுத்தமடைவது ஏனைய நாடுகளுக்கும் பரவக் கூடியது என்பது மட்டும் இதற்குக் காரணமல்ல; ஆனால் உலகின் இடைத்தொடர்பும் ஒருமைத்தன்மையும் ஆகும். இயற்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பன்னாட்டு நிறுவனங்களின் செயற்பாடு காரணமாக சர்வதேச உறவுகளில் புவியமைவியல் பிரச்னைகள் அடிக்கடி எழுகின்றன. உதாரணமாக, வளர்முக நாடுகளில், அவற்றின் செயற்பாடுகள் அடிக்கடி (இந்தியாவிலுள்ள போபாலில் நடந்ததைப் போன்ற) புவியமைவியல் அழிவுக்கு இட்டுச் செல்கின்றன.

## அபிவிருத்திப் போர்த்தந்திரவியல்

அபிவிருத்திக்கென சரியான, பொருளாதார, சமூகப் போர்த்தந்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டால் மாத்திரமே புவியமைவியல் பந்தோபஸ்தை உறுதி செய்யமுடியும். மேலும், புவியமைவியல் பந்தோபஸ்தின் சர்வ-மானுட இயல்பைப் பரிசீலிக்கும்போது, அத்தகையப் போர்த்தந்திரம் உலக சமாஜம் முழுவதினாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். இது, சுற்றுப்புறச் சூழலின் பாதுகாப்பை உறுதி செய்யவும் புவியமைவியல் தூய்மைமீது கண்காணிப்பு செய்யவும் சர்வதேச முகவர் நிறுவனங்களின் ஸ்தாபிதத்தை இது அவசியமாக்குகிறது

புவியமைவியல் பந்தோபஸ்துப் போர்த்தந்திரத்தின் பொதுவான கூறுகள் யாவை?



தொழில்துறைத் திட்டங்கள் சம்பந்தமான தீர்மானங்களை அங்கீகரிக்கையில் தத்துவத்தையும் நெம்புகோல்களையும் தீவிரமாக மாற்றியமைப்பது அவசியமாகும். பின்வரும் செயற்பாட்டு அம்சங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்: எவ்வாறு, எந்த சாதனம், தொழில் நுட்பத்தைக் கொண்டு உற்பத்தி செய்வது; ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட அளவில் குறித்த பொருளை உற்பத்தி செய்வது எவ்வாறு உசிதமானது: குறிப்பிட்ட திட்டத்தினால் முன்வைக்கப்படும் திட்டத்தின் பொருளாதார சமூகப் பின்விளைவுகள் எவை என்பதே இவையாகும்.

உலகளாவிய புவியமைவியல் பந்தோபஸ்து, மனிதகுலம் முழுவதற்கும் எம் ஒவ்வொருவருக்கும் ஓர் சிறப்பான வருங்காலத்தில் ஆர்வங் கொண்டுள்ள பல்வேறு சமூகச் சக்திகளது கூட்டு மற்றும் கூட்டிணைக்கப்பட்ட முயற்சிகளின் மூலமே சாதிக்கப்பட முடியும். சமாதானத்தையும் அடிப்படை மனித உரிமைகளையும் உறுதி செய்வது போன்ற ஏனைய உலகளாவியப் பிரச்னைகளுடன் தொடர்புபடுத்தி இப்பிரச்னையை நோக்க வேண்டும்.

உலகம் முழுவதிலும் புவியமைவியல் பந்தோபஸ்துக்கான நிலைமைகளை மக்கள் உருவாக்க வேண்டும். உலகின் அறிவுத்துறையினரை ஒன்றுபடுத்தும் உலகளாவிய உசாத்துணைக் கவுன்சிலை அமைப்பது பற்றிய மிகையில் கொர்பச்சேவின் கருத்து கவனத்துக்குரியது. புகழ்பூத்த விஞ்ஞானிகளும் கலைஞர்களும் வர்த்தக சமூகத்தின் பிரதிநிதிகளும் பொது மற்றும் அரசாங்க ஸ்தாபனங்களும் விஞ்ஞான, ஒழுக்க, அழகியல், பொருளாதார, சமூக, அரசியல் கண்ணோட்டங்களிலிருந்து இப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் மார்க்கத்தில் கனமுள்ள பங்களிப்பைச் செய்ய முடியும்.

1988, டிசம்பர் 7ம் திகதியன்று மிகையில் கொர்பச்சேவ் ஐக்கிய நாடுகள் சபையில் ஆற்றிய உரையில், 1992ம் ஆண்டில் ஐ. நாவின் கட்டமைப்புக்குள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மகாநாடு ஒன்றைக் கூட்டும் தீர்மானத்தை ஆதரித்தார். புவியமைவியல் நிலைமைகள் கூர்மையாக உக்ரமடைகின்ற பகுதிகளுக்குச் சர்வதேச நிபுணர்க் குழுக்களை உடனடியாக அனுப்பும் ஆற்றலுள்ள அவசரகால புவியமைவியல் உதவிக்கான ஐ. நா. மையத்தை அமைப்பதற்கு அவர் யோசனை தெரிவித்தார். சுற்றுச்சூழல் நிலைமையை அவதானிப்பதற்காகச் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி கூடத்தை அல்லது விண்வெளி வீரரால் செலுத்தப்படும் புறவெளி நிலையத்தை உருவாக்குவதில் ஒத்துழைப்பதற்குச் சோவியத் யூனியன் தயாராக இருக்கிறது என்று அவர் வலியுறுத்தினார். புவியமைவியல் பந்தோபஸ்தை நம்பகமாக உத்தரவாதம் செய்வதற்காக வழிவகுப்பதற்காக இத்துறையில் சர்வதேச ஒத்துழைப்பின் வளர்ச்சிக்கு ஆதரவாகப் பேசிய ஐ. நா. உறுப்பினர் நாடுகளது பிரதிநிதிகளது புரிந்துணர்வை இந்த யோசனைகள் பெற்றன.

## மார்க்ஸியம்-லெனினியமும் எமது காலமும்

# அக்டோபர் புரட்சியும் விமோசன இயக்கமும்

**சோஷலிஸம், முதலாளித்துவம் ஆகிய இரண்டில் ஒன்றைத் தெரிந்தெடுத்துக் கொள்வதுதான் எமது சகாப்தத்தின் முக்கியமான சமூக மாற்றுவழி என்பதை 19 7ம் ஆண்டு ருஷ்யாவில் நடைபெற்ற மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சி எடுத்துக் காட்டியது.**

ருஷ்யப் புரட்சி, முன்னைய காலனிகளதும் சார்பு நாடுகளதும் மக்கள் உள்ளிட, விடுதலைக்கான மக்களினது விருப்பத்தின் ஓர் உச்சநிலையாக விளங்கியது. கடந்த காலத்தின் மாபெரும் மானுடவாதிகளிலிருந்து 19ம், 20ம் நூற்றாண்டுகளின் புரட்சியாளர்கள் வரையில் மனிதகுலத்தின் மாபெரும் சிந்தனையாளர்களால் போற்றிக் காக்கப்பட்ட கனவை அது நனவாக்கியிருக்கிறது. மிகையில் கொர்பச்சேவ் அக்டோபர் புரட்சியின் முக்கியத்துவத்தை மதிப்பிடுகையில் பின்வருமாறு வலியுறுத்தினர்: இரு பெரும் புரட்சிகள்—1789ம் ஆண்டின் பிரெஞ்சுப் புரட்சியும் 1917ம் ஆண்டின் ருஷ்யப் புரட்சியும் — உலக நிகழ்வுகளின் போக்கைத் தீர்க்கமாக மாற்றியமைத்ததோடு, வரலாற்றுப் போக்கின் இயல்புமீது வலிமைமிக்க தாக்கத்தை ஏற்படுத்தின.



### எழுச்சியூட்டும் உதாரணம்

சோஷலிஸ, தேச விமோசனக் கருத்துக்களின் வெற்றியைக் குறித்த அக்டோபர் புரட்சி, ஒடுக்கப்பட்டிருந்த மக்களின் மீது பெரும் செல்வாக்கைக் கொண்டிருந்தது. கலோனியல் மற்றும் சார்பு நாடுகளது தேச விமோசனப் போராட்டத்தின் வளர்ச்சியையும் முனைப்பாதலையும் ஊக்குவித்தது என்று கூறினுல் அது மிகையானதல்ல. உண்மைகளை நோக்குவோம்.

1917ம் ஆண்டு வரையில் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு விஞ்ஞான சோஷலிஸக் கருத்துக்கள் பற்றி அறவே தெரியாது. ஆனுல், அக்டோபர் புரட்சி பற்றிய செய்திகள் இப்பிரித்தானிய காலனியின் மக்களுக்கு உத்வேகமூட்டின. தேசபக்த புரட்சிகரமான மக்கள் ருஷ்ய பாட்டாளிகள், விவசாயிகளின் இவ்வெற்றியை இதயசுத்தியோடு வரவேற்றனர்; அதில், பிரித்தானிய காலனியாதிக்கவாதிகளிடமிருந்து தமது நாட்டை விடுவிப்பதற்கான தம்முடைய நம்பிக்கையை வைத்தனர். 1920 மார்ச் 4ம் திகதி இந்தியப் புரட்சிகர மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தில், இந்திய மக்கள் உள்ளிட ஒடுக்கப்பட்ட அனைத்து வர்க்கங்களதும் மக்களதும் விமோசனத்துக்கான சோவியத் ருஷ்யாவின் போராட்டத்தை அது வரவேற்றது.

அக்டோபர் புரட்சினது செல்வாக்கின்கீழ், இந்தியாவில் முதலாவது வெகுஜன தொழிலாளர் ஸ்தாபனங்களும் கம்யூனிஸ்ட் குழுக்களும் தேசிய விமோசன இயக்கத்தை உருவாக்கின: இவற்றின் அடிப்படை கோரிக்கையான சுதந்திரத்தை வென்றெடுப்பது வியாபிதமடைந்தது. 1919 ஏப்ரில் மாதம் பஞ்சாபில் உழைக்கும் மக்கள் மேற்கொண்ட பிரிட்டிஷ்—எதிர்ப்பு நடவடிக்கை ஓர் வெகுஜன எழுச்சியாக விருத்தியடைந்தது. பிரித்தானிய காலனியாதிக்கவாதிகள் முதியோர், குழந்தைகள் என்று கூட பாராமல் இவ்வெகுஜன எழுச்சியைக் காட்டுமிராண்டித்தனமாக அடக்கியொடுக்கினர். 1920-1922ல் இந்தியாவில் தொழிலாளர் வர்க்க இயக்கம் வளர்ச்சி கண்டது; இந்திய விவசாயிகளின் வர்க்க, அரசியல் உணர்வு கிளர்ந்தெழுந்தது. அக்டோபர் புரட்சியின் முதல் வெற்றி வேட்டுக்கள் இந்தியாவிலும் ஏனைய கலோனியல் நாடுகளிலும் எதிரொலித்தன. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புகழ்வாய்ந்த பிரமுகரான அஜோய் கோஷ் சுட்டிக்காட்டியதைப் போன்று, சோஷலிஸக் கருத்துக்கள் பரந்த அளவில் விரவியமையே ருஷ்யப் புரட்சி இந்திய மக்களில் ஏற்படுத்திய மிக முக்கியமான தாக்கங்களில் ஒன்ருக விருந்தது.

மத்திய கிழக்கின் மக்களும் வாகைசூடிய அக்டோபர் புரட்சியை மனதார வரவேற்றனர். லெனினுடையவும் அவர் தம் தோழர்களுடையவும் அரசாங்கமும் ஐரோப்பியக் கொடுங்கோலர்களின் நுகத்தடியிலிருந்து கிழக்குலகை விடுதலை செய்வதற்காக அவர்

கள் நிறைவேற்றியுள்ள மகத்தான புரட்சியும் தமக்கு இன்பத்தையும் வளவாழ்வையும் கொண்டுவரும் ஒருபெரும் சக்தியாக அரபுக்களால் கருதப்படுகின்றன என்று அரபுக்களின் தேசபக்த விண்ணப்பம் கூறியது. ருஷ்யப் புரட்சினுடைய செல்வாக்கின் கீழ், ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் சுதந்திரம் மற்றும் தேசிய விடுதலைக்காகவுமான வெகுஜன இயக்கம் ஸிரியா, லெபனான், ஈராக், பாலஸ்தீனம், எகிப்து ஆகியவற்றில் வளர்ச்சியடைந்தது. 1920ம் ஆண்டில், பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியின் பகுதிகளாக அல்ஜீரியாவிலும், டுனிஸியாவிலும் மொரொக்கோவிலும் கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்கள் உருவாக்கப்பட்டன.

அக்டோபர் புரட்சியின் கருத்துக்கள் இந்தோசீன மக்களது தேசிய எழுச்சியை ஊக்குவித்தன. அவை வியத்நாமியப் புரட்சியாளர்களில் செல்வாக்கு செலுத்தின. 1919ல், கருங்கடலில் பிரெஞ்சுக் கடற்படை மாலுமிகளது எழுச்சியில் வியத்நாமியர்கள் சேர்ந்து கொண்டனர்; சோவியத் ருஷ்யாவின் உள்விவகாரங்களில் தலையிடுவதையும் தலையீடு செய்வதையும் ஏகாதிபத்தியவாதிகள் நிறுத்த வேண்டும் என்று அவர்கள் கோரினர்.

லெனினின் கருத்துக்கள் தொலைதூரத்து லத்தீன் அமெரிக்காவையும் எட்டின. அவ்வாண்டுகளின்போது இக்கண்டத்து நாடுகள் பலவற்றில் சோவியத் ருஷ்யாவுடன் ஒருமைப்பாட்டைத் தெரிவிக்கும் இயக்கங்களை உழைக்கும் மக்கள் நடத்தினர். ஆர்ஜெண்டினாவிலும் பிரேசிலிலும் ஜனநாயக அமைப்புகளின் மகாநாடுகளில் சோவியத் தேசத்துக்கு ஆதரவான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ருஷ்யக் கம்யூனிஸ்ட்டுகளது புரட்சிகரச் செயற்பாட்டைப் பாராட்டிய பிரேசில்எழுத்தாளரான லிமாபாரெட்டோ, மனிதகுலம் முழுவதற்கும் பேரார்வம் வாய்ந்த ஓர் தெட்டத்தெளிவான சமூகஇயல்நிகழ்வாகவும் உண்மையிலேயே எல்லையற்ற வாய்ப்பைக் கொண்டதாகவும் அது விளங்கியது என்று வலியுறுத்தினர்.

## முன்னேற்றத்தை ஊக்குவித்து . .

வாகைசூடிய அக்டோபர் புரட்சியின் பின்னர் சோவியத் நாடு தனது சக்திக்கு ஏற்றவகையில் வளர்முக நாடுகளுக்கு பொருளாதார, மற்றும் பிற உதவிகளை வழங்கவும் அவற்றுடன் வர்த்தகத்தை வளர்க்கவும் ஆரம்பித்தது. இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து இந்த உறவுகள் பரஸ்பரம் பயன் மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் வளர்ச்சியடைந்தன. பிற்காலத்தில் இப்போக்கு குறிப்பிடத்தக்க அளவுக்குச் செயலூக்கமானதாகவும் இயக்காற்றல் உள்ளதாகவும் மாறியது. தற்போது சோவியத் யூனியன் நூற்றுக்கும் மேற்பட்ட விமோசனமடைந்த நாடுகளுடன் வெவ்வேறு வடிவங்களில் ஒத்துழைத்து வருகிறது. நீண்டகால ஒப்பந்தங்களுக்கும் பங்காளிகளது தனிப்பட்ட பொரு



ளாதார, திட்டமிடல் முகவர் நிறுவனங்கள் மத்தியில் தொடர்புகளையும் பிணைப்புக்களையும் முனைப்பாக்குவதற்கும் தலையாய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. சோவியத் யூனியனுக்கும் சிரியா, இந்தியா, தென்யேமன், ஈரான் மற்றும் பிற வளர்முக நாடுகளுக்கும் இடையே பொருளாதார ஒத்துழைப்பு பற்றிய . நிரந்தரமான, அரசாங்கங்களுக்கிடையிலான கமிஷன்கள் அமைக்கப்பட்டு, இப்போது வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்கின்றன. இருதரப்பு ஒத்துழைப்புக்கான ஒப்பந்தங்களையும் வாய்ப்புகளையும் நடைமுறையில் சாதிக்கும் பிரச்னைகளை அவை கையாள்கின்றன.

இருந்துவரும் ஒப்பந்தங்கள், உடன்பாடுகளுக்கு இசைவாக, சோவியத் யூனியன் சுதந்திரமான ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் நூற்றுக் கணக்கில் பல்வேறு தொழிலகங்களை நிர்மாணிப்பதற்கு உதவுகிறது. அத்தகைய ஈராயிரத்துக்கும் கூடுதலான திட்டங்கள் வளர்முக நாடுகளில் செயற்படுத்தப்பட்டு அவற்றுக்குப் பயன்தருகின்றன. ஆனால், பிற்காலத்தில், இந்நாடுகள் சிலவற்றுடனான சோவியத் யூனியனின் ஒத்துழைப்பில் சிரமங்கள் தோன்றின. வளர்முக நாடுகள் அனுபவித்து வரும் பொருளாதாரச் சிரமங்களும், நிதிப் பற்றுக்குறையும் இந்நாடுகள் மேற்கு நாடுகள் பால் கூடுதலாகச் சார்ந்திருந்தமையும் இதற்குக் காரணங்களாகும். வளர்முக நாடுகளுக்கு சோவியத் ஏற்றுமதிகள் குறைக்கப்பட்டமை சோவியத் பொருளாதாரத்தில் எதிர்மறையான நிகழ்வுப் போக்குகளில் ஏற்பட்டதாகும். சோவியத் யூனியனில் தற்போது நிகழ்ந்துவரும் பெரஸ்த்ரொய்காவும், ஒத்துழைப்பின் புதிய வடிவங்களுக்கான தேடலும், குறிப்பாக கூட்டு முயற்சிகளும் நிலைமையை மேம்படுத்தக்கூடும்.

முன்னைய காலனிகளும் அரைக்காலனிகளுமான வளர்முக நாடுகள் மீது அக்டோபர் புரட்சி செலுத்திய செல்வாக்கின் சில அம்சங்களை மாத்திரம் நாம் பார்த்தோம். இன்றும் கூட, சுதந்திரம் மற்றும் சமத்துவம் பற்றிய அதன் கருத்துக்களும், சமாதானம், படைக் குறைப்பு, சமூக முன்னேற்றத்துக்கான சோவியத் அரசின் போராட்டமும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களது புரிந்துணர்வையும் ஆதரவையும் பெற்றுள்ளன.

**ரோசவியத் பத்திரிகையிலிருந்து**

★

## அறிஞர் அபிப்ராயம்

பேராசிரியர் ஒலெக் லாமின்

# தார்மீக நெறியின் புத்தாக்கம்

அக்டோபர் புரட்சி சோவியத் யூனியனின் மக்களினது அரசியல் சால்பின் வளர்ச்சியைப் மெருமளவுக்கு விரைவுபடுத்தியது. ஜனநாயகமயமாக்கம், கிளாஸ்னாஸ்த், அரசியல் சுய-அரசாங்கம், அதிகார மமதைக்கு எதிரான போராட்டம் ஆகிய லெனினியக் கோட்பாடுகளை நடைமுறையில் உறுதியாக நிலைநிறுத்தியது, உழைக்கும் மக்களது அரசியல் சால்பின் கருத்தமைப்பை நிர்ணயம் செய்தது.

உள்நாட்டு யுத்தத்தினாலும் ஏகாதிபத்தியத் தலையீட்டினாலும் சீரழிந்த இவ் விவசாய நாட்டில் ஜனநாயக ரீதியிலான முன்னேற்றச் சாதனை எதுவும் இருக்கவில்லை, அரசியல் பிரக்ஞை அதனது வளர்ச்சியில் அடிக்கடி தொய்வுகளைக் கண்டது; இது ஸ்டாலினின் தனிநபர் வழிபாட்டை நிலைநிறுத்துவதற்கு இசைவானதாக இருந்தது. அரசியல் வளர்ச்சி சோஷலிஸ ஜனநாயகத்தை வெட்டிக் குறைக்கும் பாதையைப் பின்பற்றியது, ஜனநாயக மத்தியத்துவம் பற்றிய லெனினியக் கோட்பாடுகளை அதிகார மமதைத்துவக் கோட்பாடுகளைக் கொண்டு அப்புறப்படுத்தியது. உருத்திரிக்கப்பட்ட கருத்துக்கள் சமூகப் பிரக்ஞைக்குள் ஊடுருவின. அரசியல் ரீதியிலான சந்தேகமும் உளவறியும் மனோபாவமும் முன்னங்கை எடுத்தன.

### புது யுகம்

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது காங்கிரஸில்தான், அரசியல் வாழ்வை ஜனநாயகமயமாக்கும் திசையில் முன்னேற்றம் தென்பட்டது. அது ஆரம்பமான உடனேயே, 1930ம் ஆண்டுகளிலும் 1940ம் ஆண்டுகளிலும் நிலைநிறுத்தப்பட்டிருந்த கட்டளை பிறப்பிக்கின்ற, அதிகார மமதைத்துவ அமைப்பின் கடுமையான எதிர்ப்புக்கு முகங்கொடுத்தது. ஜனநாயகமயமாக்கத்தின் அடிப்படையிலேயே புதியதான ஒரு கட்டம், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் ஏப்ரில் 1985 முழுநிறைவுக் கூட்டத்துக்குப் பின்னர்தான் ஆரம்பமாகியது: இப்போது இது ஓர் ஸ்திரமான குணவியல்பை பெற்றிருக்கிறது.

கிளாஸ்னாஸ்த், கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் தேர்ந்தெடுக்கும் நடைமுறை, கட்சி மற்றும் அரசாங்க உறுப்புக்களுக்கு இடையே கடமைகளைப் பிரிப்பது, விமர்சனம் மற்றும் சுய-விமர்சனம் ஆகிய நெருக்கமாகப் பின்னிப் பிணைந்த கோட்பாடுகளின் அடிப்படையில் சோஷலிஸ சமுதாயத்தின் வாழ்வில் அனைத்துத் துறைகளையும் ஜனநாயகமயமாக்கும் கருத்து பெரஸ்த்ரொய்காவின் மையமாக உள்ளது. ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டோடு இணைந்த சோஷலிஸப் பன்மைத்துவக் கோட்பாடு, சமுதாயத்தின் தார்மீக உள்ளாற்றலைக் கணிசமாக அதிகரித்தது. ஒரு குறிப்பிட்ட பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்குப் பல்வேறு யோசனைகளைத் தெரிவித்து, ஆகவும் சிறந்ததைத் தேர்ந்தெடுத்து, அதன் பின்னரே அப்பிரச்னைக்கான தீர்வு மீது கவனஞ் செலுத்தப்பட்டது. பொதுவாகவே, சோஷலிஸப் பன்முகவாதம் சோவியத் மக்கள் முன் பல்வேறு வாய்ப்புகளைத் திறந்து வைக்கிறது; அவர்கள் இவற்றைப் பயன்படுத்துவதற்கு இப்போதுதான் கற்று வருகின்றனர்.

### கடமையாகிய உழைப்பு

அக்டோபர் புரட்சியின் பின்னரான முதல் பத்து ஆண்டுகளின்போது ஆதிக்க நிலையிலிருந்தவை ஒழுக்கநெறி, கடும் உறுதி, தியாகம், வழுவாத வர்க்க ஒழுக்கம் ஆகியனவேயாகும். அதைத் தொடர்ந்து, அரசின் நலன்களிலிருந்து மாத்திரமே முன்செல்லும் மற்றுமோர் ஒழுக்கநெறியும் வித்தூன்றப்பட்டது. உழைப்பு, அரசுக்கான ஒருவரின் கடமையாகக் கருதப்பட்டது; அதே சமயம், தனிநபருக்கான அரசின் கடமை போன்ற வகையினம் நடைமுறையிலேயே உருத்திரிக்கப்பட்டது. அதிகார மமதைத்துவ அமைப்பு பதவி வகிப்போருக்கு அடிமையாக இருப்பதையும் அவர்களுக்கு அடிவருடியாகவும் கீழ்ப்பணிவாகவும் இருப்பதையும் ஊக்குவித்தது. ''முட்டைகளை உடைக்காமல் முட்டைக் கறி வைக்கமுடியாது'' என்ற கோட்பாட்டுக்கு இசைவாக, ஆகவும் உக்ரமடைந்ததாகக் கூறப்பட்ட வர்க்கப் போராட்டம், வர்க்க—எதிரிகள் எனப்பட்டவர்களை ஒழித்துக்கட்டும் முயற்சியில் ஒழுக்கமின்மையையும் நிர்ப்பந்தத்தையும் நியாயப்படுத்துவதற்கு ஓர் மூடுதிரையாகப் பயன்படுத்தப்பட்டது.

### தேக்க நிலை

1970ம் ஆண்டுகளிலும் 1980ம் ஆண்டுகளிலும் நிலவிய தேக்க நிலை காலகட்டத்தில் நாட்டின் ஒழுக்கநெறி பெருமளவுக்குப் பாதிப்பிற்குள்ளானது. கட்டளை பிறப்பிக்கும் அதிகார மமதைத்துவ அமைப்பினுடைய தாக்கத்தின்கீழ் சமூகப் பிரக்ஞையிலும் பழக்கவழக்கத்திலும் கருத்தாழமுள்ள உருச்சிதைவுகள் இடம்பெற்றன; இவை, சொத்திலிருந்தும் ஆக்கபூர்வ உழைப்பிலிருந்தும் உழைப்புக் கூட்டினதும் சமுதாயம் முழுமையினதும் மட்டத்திலே அரசாங்கத்தில் பங்கெடுப்பதிலிருந்தும் மக்கள் பிரிக்கப்பட்டதன் மூலம் உற்பவித்தன. பொருளாதார, அரசியல் தேக்கநிலை, நேரடியாகவே சமூக ஒழுக்கநிலையின் சரிவோடு பிணைந்திருந்தது.

### மாற்றப் போக்கு

பெரஸ்த்ரொய்கா சமுதாயத்தினதும் தனிநபரினதும் ஒழுக்கநெறி வளர்ச்சியில் ஓர் அடிப்படையான மாற்றத்தைத் துவக்கிவைத்தது. சுய-மேம்பாட்டுக்கான அபிலாஷையைப் போலவே சமூக நீதி, நேர்மையின் பொதுவான மானுட ஒழுக்கவியல் தரங்கள், கடமைக்கு விசுவாசம், நன்மைசெய்தல், கருணை ஆகியவற்றுக்கு புத்துயிரளிக்கப்பட்டு வருகின்றன. ஒழுக்கவியலிலான அழுத்தம் பொதுவான மானுடப் பெறுமானங்களுக்கு மாற்றப்பட்டு வருகிறது.

இப்போக்கில் கலாசாரமும் கலையும் முக்கியமான பாத்திரத்தை வகிக்க வேண்டியுள்ளன. இன்று நவீன ஓவியத்தை ஒரு புதிய கோணத்திலிருந்து நாம் பார்க்கிறோம். சமூகச் சீர்குலைவுகள் பொதுவாகக் கலையின் வளர்ச்சியிலும் குறிப்பாகத் தனித்தனிக் கலைஞர்களது வளர்ச்சியிலும் நேரெதிரான தாக்கத்தைக் கொண்டுள்ளன என்றாலும் கூட, தனிநபர் வழிபாடு மற்றும் நாட்டின் தேக்கநிலைக் காலகட்டத்தின்போது கருத்தாழமுள்ள முரண்பாடுகளையும் வெற்றிகொண்டு நாட்டின் கலைத்துவ உள்ளாற்றல் தொடர்ந்து அதிகரித்து வந்தது என்பதைக் கூறியாக வேண்டும். மிகவும் முக்கியமாக, மெய்யான கலைப் படைப்புக்கள் அனைத்தினதும் மையமாக, சமூகச் சூழ்நிலைகளின் முரண்பட்ட செல்வாக்கை அனுபவிக்கும் தனிநபரே விளங்கி வந்துள்ளார்.

''பொலிட்டிச்செஸ்கோயே ஒப்ராஸோவானியே''
சஞ்சிகையிலிருந்து.

★

**பேட்டி**

# உலகப் புரட்சியின் கதிப்போக்குகள்

**மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர் அனைத்து நாடுகளிலும் சோஷலிஸப் புரட்சியின் வெற்றி குறித்து ஹேஸ்யம் கூறினர். சோவியத் ராஜ்யத்தினுடைய ஜீவிய காலத்தில் முதல் இருபது ஆண்டுகளின்போது, சோஷலிஸப் புரட்சி உலகம் முழுவதிலும் வெற்றி கண்டுவிடுமென நம்பப்பட்டது. பேராசிரியர் இகோர் கிரிவோகுஷ் ''ஆர்குமெண்டி இ ஃபெக்டி'' நிருபருக்கு அளித்த பேட்டியில் உலகப் புரட்சி ஏன் நிகழவில்லை, ஏன் நிகழமுடியாது என்பதை விளக்குகிறார்.**

**லெனின் உலக சோஷலிஸப் புரட்சி பற்றிய கருத்தமைப்பை வகுத்துரைத்தார். இருபதாம் ஆண்டுகளில் முதலாளித்துவ நாடுகளுடன் சோவியத் ராஜ்யத்தின் சமாதான சகவாழ்வுக் கருத்தமைப்பை அவர் வகுத்தார். பரஸ்பரம் பிரத்தியேகமான இந்தக் கருத்தமைப்புகள் எவ்வாறு ஒன்றுக் கொன்று தொடர்புபட்டிருந்தன, லெனினது கருத்துக்கள் எவ்வாறு வளர்ச்சியடைந்தன?**

லெனின் 1908ம் ஆண்டில் பாட்டாளிகளது உலகப் புரட்சியின் அவசியம் பற்றி முதலில் பேசினார். ஏகாதிபத்தியத்தைப் பகுப்பாய்வு செய்கையில் அதன் எதிர்மறைப் போக்குகளுக்கும் முரண்பாடுகளுக்கும் சோஷலிஸத்தினது ஸ்தூலமான முன்தேவைகளின் பரிபக்குவத்துக்கும் லெனின் கவனஞ் செலுத்தினார். இதற்கேற்ப, அக்கட்டத்தின் ஏகாதிபத்தியத்தை, சோஷலிஸப் புரட்சிக்கு முன்பதான கட்டத்தில் இருக்கும் ஏகாதிபத்தியமாக அவர் குணாம்சப்படுத்தினார். சமூக வளர்ச்சி சமதையற்றதாக இருப்பதால் சோஷலிஸப் புரட்சி ஒரு நாட்டிலோ அல்லது ஒருசில நாடுகளிலோ முதலில் வெற்றிபெறும் என்றும் சோஷலிஸம் அனைத்து நாடுகளதும் பாட்டாளிகளால் சாதிக்கப்பட மாட்டாது. ஆனால் வளர்ச்சியுற்ற முதலாளித்துவத்தின் வளர்ச்சி மட்டத்தை எட்டியுள்ள ஒரு சில நாடுகளின் பாட்டாளிகளால் தான் சாதிக்கப்படும் என்றும் லெனின் வாதிட்டார்.

அத்தகைய நாடுகளின் வரிசையில் ருஷ்யா இல்லாமலிருந்தபோதிலும் கூட, 1917ம் ஆண்டின் பெப்ருவரி புரட்சிக்குப் பின்னர் நாட்டிலும் உலகம் முழுவதிலும் காணப்பட்ட சக்திகளின் பரஸ்பர உறவைப் பகுப்பாய்வு செய்த லெனின், ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் ஓர் உலக சோஷலிஸப் புரட்சிக்கு முன்னோடியாக இருக்க முடியும் என்ற முடிவுக்கு வந்தார். வாகைசூடிய அக்டோபர் சோஷலிஸப் புரட்சியை உலகப் புரட்சியின் ஆரம்பமாக அனைத்து நாடுகளதும் சோஷலிஸ்ட்டுகள் கருதினர்.

1917 அக்டோபர் முதல் 1920 கோடை காலம் வரையில் கூடுதல் வளர்ச்சியுற்ற நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சிகள் உடனடியாக நிகழும் அல்லது வெகு விரைவில் வெற்றிபெறும் என்றும் புரட்சிகரச் சக்திகள் உலகப் பாட்டாளிகளது புரட்சியின் விளிம்பில் இருந்தன என்றும் அபிப்ராயம் கொண்டிருந்தார் லெனின்.

ருஷ்யா, உலக சோஷலிஸப் புரட்சியின் குறுகியகால முன்னணிப் படை என்றே லெனின் கருதினார். கூடுதல் வளர்ச்சியுற்ற நாடுகளில் சோஷலிஸப் புரட்சிகளின்போதே இறுதியான, தீர்க்கமான சண்டை நடத்தப்படும். இப் புரட்சிகள் உலகளாவியப் புரட்சியின் முக்கியமான கண்ணிகளாக மாறுமென எதிர்பார்க்கப்பட்டது. 1920ம் ஆண்டில், ஐரோப்பாவிலே ஒரு புரட்சிக்கான நம்பிக்கைகள் உணரப்படாத வேளையில், ஓர் உலக சோஷலிஸப் புரட்சி நடைபெறுவதற்குப் பல ஆண்டுகள் எடுக்கும், பெரு முயற்சியை அவசியப்படுத்தும் என்பதை லெனின் உணர்ந்தார்.

லெனின் ஓர் எதார்த்த அரசியல்வாதி, உலக நிகழ்வின் அனைத்து மாற்றங்களையும் உன்னிப்பாக அவதானித்தவர். உண்மைகள் தத்துவத்துக்குப் பொருந்தவில்லையாயின், திருத்தப்பட வேண்டியது தத்துவமே என்று அவர் உறுதியாகத் தெரிவித்தார். லெனினின் இந்தக் காத்திரத்தன்மையும், புதியதை ஏற்றுக்கொள்ளும் அவரின் மனோபாவமும் புரட்சிகர வீச்சின் வீதம்



குறைவதையும் உலகப் புரட்சி தாமதப்படுகிறது என்பதையும் அவர் காண்பதைச் சாத்தியமாக்கின.

ருஷ்யா முதலாளித்துவச் சுற்றுச்சூழலில் தனித்து இருக்க வேண்டியுள்ளது என்பதை மற்றவர்களுக்கு முன்பே உணர்ந்திருந்த லெனின், முதலாளித்துவ நாடுகளுடன் சமாதான சகவாழ்வை ஸ்தாபிப்பதற்காக உழைக்கத் தொடங்கினார்.

லெனினின் இக்கருத்தமைப்பு நாடு முதலாளித்துவ நாடுகளுடன் ஒத்துழைப்பில் ஈடுபடவும் காரியார்த்தபூர்வ உறவுகளை ஸ்தாபிக்கவும் கூட்டு முயற்சித் தொழிலகங்களை ஸ்தாபிக்கவும் சலுகைகளை வழங்கவுமான திசைவழியைக் கொண்டிருந்தது. மேலைய பாட்டாளி வர்க்கம் இன்னமும் வெற்றியடையவில்லையாதலால், முதலாளித்துவத்தைக் கவர்ந்தெடுப்பதும் சோவியத் ராஜ்யத்தினது பொருளாதாரப் புத்தெழுச்சி நோக்கங்களுக்கு அதைப் பணிபுரியச் செய்வதும் அவசியமானது என்று லெனின் நம்பினார்.

உலகப் புரட்சியைப் பொறுத்தவரையில், 1923 ஜனவரியில் அதை வரலாற்று வாய்ப்பாக லெனின் விளக்குனார்; வளர்ந்துவரும் புரட்சியாக விளக்கவில்லை.

**உலகப் புரட்சி சம்பந்தமாக போல்ஷிவிக் கட்சியின் தலைமையில் வேறுபாடுகள் எதுவும் இருந்தனவா?**

சக்திகளின் அணிசேர்க்கை வருமாறு: மேற்கு ஐரோப்பாவின் வாகைசூடிய பாட்டாளிகளது உதவியில்லாமல் பின்தங்கிய ருஷ்யாவில் சோஷலிஸத்தை நிர்மாணிக்க முடியாது என்று ட்ரொட்ஸ்கியும் ஸினோவியேவும் நம்பினர். ஸ்டாலினோ, விசேஷ காரணங்களுக்காக அதைத் தவிர்த்துக்கொண்டார்; ருஷ்யாவில் சோஷலிஸத்தை நிர்மாணிப்பது அசாத்தியமானதாதலால் அதனது வாய்ப்புகள்தான் என்ன? கட்சிக்கு அவ்வேளையில் ஓர் தெளிவான உருவரை தேவைப்பட்டது. ஏனெனில், அக்காலகட்டத்தில் ஸ்டாலினும் அவரை ஆதரித்த புக்காரினும் வெற்றிபெற்றனர்.

**உலக சோஷலிஸப் புரட்சி இடம்பெறவில்லை என்பதை நீங்கள் எவ்வாறு விளக்க முடியும்?**

நான் காண்பதைப் போன்று, உலகப் புரட்சி இடம்பெறாமைக்கான முக்கியமான காரணம் (அது வேறு விதமாகவும் இருக்கமுடியாது) முதலாளித்துவம் அதன் வாய்ப்புகளை இன்னும் வற்றடித்துக் கொள்ளாமலேயே இருக்கிறது என்பதில் தான் உள்ளது, அது தனது வளர்ச்சியில் நெருக்கடியை வெற்றிகண்டது, சேமப்படைகளை அணிதிரட்டியது.

சமகால உலகப் புரட்சிகரப் போக்குகள் ஆகவும் மாறுபட்டவை. ஒரு புறத்தில் முதலாளித்துவத்திலிருந்தும், முதலாளித்துவத்துக்கு முந்திய அமைப்புகளிலிருந்தும் சோஷலிஸத்துக்கு மாறிச் செல்லும் போக்கை நாம் கண்டு வருகிறோம். ஆனால், முதலாளித்து

வத்துக்கு முன்பதான வடிவங்களிலிருந்து முதலாளித்துவத்துக்கு மாறிச் செல்லும் போக்கே இன்னும் கூடுதல் பரந்ததாகக் காணப்படுகிறது.

முதலாளித்துவத்தின் வளர்ச்சியை எதார்த்தபூர்வமாக மதிப்பிட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். எந்தவொரு நாட்டினதும் சமூக முன்னேற்றத்தின் பிரதான சுனையை நாம் சோஷலிஸத்தில் காணக்கூடாது: அல்லது பிராந்திய மோதல்கள் யாவற்றையும் இரு அமைப்புகளுக்கு இடையிலான மோதல் நிலைக்கு நாம் குறைத்துவிடவும் கூடாது.

இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் பாஸிஸம் பரவியமை, கம்யூனிசத்தைப் பரப்புவதற்கான முயற்சிகளுக்கு ஒருவித தற்காப்புச் செயலாக விளங்கியது என்று சில சமயங்களில் வலியுறுத்தப்படுகிறது.

பாஸிஸம் இந்நோக்கை அனுகூலமாக எடுத்துக்கொண்டது. உலகப் புரட்சி பற்றிய பிரசாரம் பாஸிஸத்தின் எழுச்சியில் முடிவடைந்தது என்று மெய்யார்வத்துடன் வலியுறுத்துவது சாத்தியமற்றது.

1918ம் ஆண்டில் படுதோல்வியடைந்த ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் விளைவுதான் பாஸிஸம், அதன் உயிர்வாழ்வுக்கு இடையூறாக அமைந்த தொழிலாளிவர்க்க இயக்கத்தினது வளர்ச்சியினது விளைவே பாஸிஸம். அதேசமயம், தொழிலாளிவர்க்க இயக்கம் சோவியத் யூனியனைக் காட்டிலும் ஆழமாக வேரூன்றி, நிலவி வந்தது.

பாஸிஸம், உலகக் கம்யூனிசம் பற்றிய கருத்தைத் தனது தன்னல நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டது. தற்செயலாக, உலகப் புரட்சிகரப் போக்கு பற்றிய கருத்தமைப்பு சோவியத் யூனியனுடன் உறவுகளை மேம்படுத்திக்கொள்ள விரும்பாதவர்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

★

# சோவியத் சமுதாயம்: சாதனைகளும் பிரச்னைகளும்

ஏ. மிக்ரன்யான்
வரலாற்று விஞ்ஞானத்தில் வேட்பாளர் பட்டம் பெற்றவர்

# சமுதாயமும் அரசும்

தனிநபரும், சமுதாயமும் அரசும் ஒன்றிணைந்தவையாகும், அவை பிரிக்கப்பட முடியாதவை, தனிப்பட்ட பிரஜைகளின் மற்றும் சமுதாய முழுமையின் நலன்களை அரசு பூரணமாகவும் பயனுறுதியாகவும் பிரதிபலிக்கிறது என்ற கருத்து சமூக விஞ்ஞானங்களிலும் பொது மக்களின் உணர்விலும் பல பத்தாண்டுகளாக நிலவி வந்துள்ளது. ஆனல் ஓரளவு சமத்துவமற்ற பங்காளித்துவம் இந்த முக்கூட்டில் உணரப்பட்டு வந்துள்ளது. அரசியல் தத்துவத்திலும், சமூக நடைமுறையிலும் பரிச்சயம் இல்லாத நபர்களும் கூட அரசின் எல்லாம் வல்ல தன்மை, அதற்கு முன்னல் தனி மனிதன் மற்றும் சமுதாயத்தின் ஆற்றலற்ற தன்மை ஆகியவற்றின் எண்ணற்ற உதாரணங்களை தமது சொந்த அன்றாட அனுபவத்தில் பார்க்க முடியும்.

## எதற்கு முன்னுரிமை—சமுதாயத்திற்கா, அரசுக்கா?

தமது அன்றாட வாழ்க்கையில் சோவியத் மக்கள் நடைமுறையில் ஒவ்வொரு விஷயத்திலும் அரசுடன் சம்பந்தப்படவேண்டியுள்ளது. அது சில சமயங்களில் விஷயங்களை அனுமதிக்கிறது, ஆனல் அதிகமாக அடிக்கடி தடை செய்கிறது,

மற்றும் எப்போதும் முறைப்படுத்துகிறது. எல்லா இடங்களிலும் மக்கள், அரசு தம்மை தண்டிப்பதை, அல்லது மன்னிப்பதை, வெகுமதி வழங்குவதை, அல்லது, தம்மைப் பாதுகாப்பதையும் எல்லோருடைய நலன்களையும் கவனத்தில் எடுத்துக்கொள்வதையும் காண்கின்றனர். இது அவர்களது வாழ்வின் மிகப் பெருமளவுக்கு ஒரு பாகமாகிவிட்டதால், அரசு இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு சிருஷ்டியாக, அவர்களது பிரச்னைகள் யாவற்றையும் தீர்க்க வல்லதாக மாறியுள்ளது; அரசுடன் ஒன்றிணைந்து நிற்பது எந்தத் தனிநபரின் வாழ்க்கையையும் அர்த்தமுள்ளதாக்குகிறது.

இங்கு நான் ஒரு கேள்வியை முன்வைக்கிறேன், அதற்கு இந்தக் கட்டுரையில் பதிலளிக்க முடியும் என்று நம்புகிறேன்: சோஷலிஸ அரசு எப்போதும் சமுதாயத்தையும் தனிநபரையும் தன்வயப்படுத்திக்கொள்கிறதா? மக்கள் புரட்சியை நடத்தி முடித்த போது மெய்யாகவே இதைத்தான் விரும்பினார்களா? அல்லது, நாமொன்று நினைக்க, அது வேறொன்றாகி விட்டது என்று நினைக்கிறார்களா?

எது தவறாகப் போயுள்ளது என்பதை இப்பொழுது பார்ப்போம்.

மார்க்சும் எங்கெல்சும் ''நாகரிகமான சமுதாயம்'' என்ற சொற்றொடரை வெவ்வேறு பொருள்களில் பயன்படுத்துகின்றனர். இருந்தபோதிலும், இந்த சொற்றொடர், எப்போதும், சமுதாயத்தில், குறிப்பாகப் பொருளாதார உறவுகளில் இருந்து வருகிற சகல அரசியலற்ற உறவுமுறைகள்—சமூக, தார்மீக, குடும்ப, தேசிய, முதலிய—யாவற்றின் ஒட்டுமொத்தத்தைப் பிரதிபலிக்கிறது.

அரசுக்கும் சமுதாயத்திற்கும் இடையிலான பரஸ்பர செயல்வினை பற்றிய தமது சொந்தத் தத்துவத்தை மார்க்சிய அரசியல் சித்தாந்தம் முன்வைத்தது. பூர்ஷ்வா அரசியல் தத்துவவியலில் மரபாகியிருந்தது, தனிநபரை சமுதாயத்திற்கும் அரசுக்கும் எதிரும் புதிருமாக வைக்கும் கருத்துக்களினின்றும் அது உறுதியாக முறித்துக்கொண்டு, முரண்பாடுகளின் விஷவட்டத்திற்கு அப்பால் சென்றது.

அரிஸ்டாட்டில், பிளேட்டோ, மற்றும் பிற பண்டைய தத்துவஞானிகள் சமுதாயத்தை ஓர் உயிரமைப்பாகக் கருதினர், மனிதனின் இயல்பான அரசு பண்டைய நகர—அரசுகளுடன் ஒருங்கிணைந்துவிட்ட ஒன்றாகக் கருதப்பட்டது; மனிதனது வாழ்வின் சாராம்சமும் நோக்கமும், அவனது சமூகத்தின் விவகாரங்களில் அவனது ஈடுபாடு மட்டுமே என்று தாழ்த்தப்பட்டது.

நவீன காலம் அந்த ஒருங்கிணைப்பைத் தகர்த்து, சமுதாயத்தை அரசுக்கு எதிராகவும், தனிநபரை சமுதாயத்திற்கும் அரசுக்கும் எதிராகவும் நிலவரப்படுத்தியது.

மேலைய நாடுகளில் இந்த நிகழ்வுப் போக்கு இன்னும் நடைபெற்று வருகிறது. தத்துவ ரீதியிலோ அல்லது அரசியல் நடைமுறையிலோ, தனிநபருக்கும், சமுதாயத்திற்கும் அரசுக்கும் இடையிலான வேறுபாட்டைப் போக்குவது சாத்தியமாகவில்லை; முன்னேற்றமடைந்த முதலாளித்துவ நாடுகளில் இது சமூகப் பதற்றத்திற்கான ஒரு தொடர்ந்த ஊற்றுக்காலாக இருந்து வருகிறது.



நாகரிக சமுதாயத்தினால் அரசு மேம்பட்ட முறையில் கட்டுப்படுத்தப்பட்டிருந்த நாடுகளில் முதலாளித்துவம் மிகவும் பயனுறுதியான முறையில் வளர்ச்சியடைந்தது என்பதை 18வது, 19வது நூற்றாண்டுகளின் அனுபவம் காட்டுகிறது. பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் முதலாளித்துவமானது பிரான்ஸைக் காட்டிலும் வேகமான முன்னேற்றத்தைக் கண்டது; பிரான்சில், ஜெர்மனியையும், ஆஸ்ட்ரியா-ஹங்கேரியைக் காட்டிலும் வேகமாகவும், இந்த நாடுகளில் ரஷ்யாவைக் காட்டிலும் வேகமாகவும் முதலாளித்துவம் முன்னேற்றத்தைக் கண்டது.

அரசின் இராணுவ முறையிலான கட்டுப்பாட்டுக்கும் பல்வேறு மட்டங்களில் அதன் உறுப்புக்களுக்கும் எதிராக தனிநபரும் பொது வாழ்வுத் துறைகளும் மேம்பட்ட முறையில் பாதுகாக்கப்பட்டுள்ள இடங்களில் சமுதாயத்தின் வளர்ச்சி கூடுதல் பயனுறுதியுள்ளதாக இருக்கிறது. தனிநபர்களும் சகல வகைப்பட்ட ஸ்தாபனங்களும் — நாகரிக சமுதாயத்தின்—நாங்கள் எதிர்ப்படும் இடர்ப்பாடுகள் மற்றும் முரண்பாடுகள் பற்றிய விவாதத்தை அரசியல் செயல்பாடு மற்றும் அரசியல் ரீதியில் முடிவு செய்யும் அரங்குக்கு எடுத்துச் செல்வதற்கான ஒரு வாய்ப்பைப் பெற்றுள்ளன. பிரிட்டனில் இதற்கான சான்றைக் காண்கிறோம். இங்கு மக்கள் சமுதாயம், 12ம் நூற்றாண்டிலிருந்து முடியாட்சியை எதிர்த்து விடாப்பிடியாகப் போராடியது, இறுதியாக, 17ம் நூற்றாண்டில் அதைப் பணிய வைத்தது. அமெரிக்காவின் 200 ஆண்டுக் காலத்திற்கு மேற்பட்ட வரலாறும் இதற்கு சான்று பகர்கின்றது. பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் தான் சட்டபூர்வமாகவும், சமாதானபூர்வமாகவும் சோஷலிஸத்திற்கு மாறிச் செல்வதற்கு மிகவும் சாதகமான நிலைமைகள் உருவாகியுள்ளன என்று மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக்காட்டினர்.

ஓர் உயர் வளர்ச்சியடைந்த நாகரிக சமுதாயம்தான் ஓர் அரசியல் ஆட்சியின் ஸ்திரத்தன்மைக்கு அடிப்படையாகும்.

உதாரணமாக, ருஷ்யாவிலும் ஜெர்மனியிலும் நாகரிக சமுதாயங்கள் போதுமான அளவு வளர்ச்சியடையாததுதான் முதலாவது உலகப் போரில் ஏற்பட்ட தோல்விகள் அந்த நாடுகளில் அரசு அமைப்புக்கள் வீழ்ச்சியடைவதற்கு இட்டுச் சென்றது.

எனவே, எந்த ஒரு நாட்டிலும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்திற்கு மாறிச் செல்லும் தருணத்தில் நாகரிக சமுதாயம் அரசிடமிருந்து எந்த அளவுக்குப் பிரிந்து நிற்கிறது என்பது மிகமிக முக்கியத்துவம் வாய்ந்

ததாகும் என்ற முடிவுக்கு நாம் வர முடியும்.

மார்க்சியத் தத்துவத்தின் படி, ஒரு சமூகப் புரட்சி நடைபெறும்பொழுது, மக்கள் சமுதாயத்தில் முக்கியமான மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன; தனிச் சொத்துடைமைக்கும், ஆளும் வர்க்கங்களுக்கும் முடிவு கட்டப்படுகிறது. புதிய அரசு அதிகார அமைப்புகள் உருவாக்கப்பட்ட பின், இந்த மாற்றங்கள் அரசியல் துறையில் சட்டபூர்வமாக்கப்படுகின்றன. மக்கள் சமுதாயம் இவ்வாறு பூரணமாக விடுதலை செய்யப்படுகிறது: புதிய சமுதாயத்தில் அமைந்துள்ள பகைமையற்ற வர்க்கங்கள் உற்பத்தி சாதனங்களின் உடைமையாளர்களாகின்றன. அடுத்து, பிற வர்க்கங்களின்மீது சில ஆதிக்கத்தைப் பராமரிக்கும் விசேஷ அமைப்பு என்ற வகையில் அரசுக்கு இனி ஒரு போதும் எத்தகைய அவசியமும் இருப்பதில்லை. சுருங்கக் கூறின், சோஷலிஸத்திற்கு மாறிச் சென்றதற்குப் பின், அரசு முறைப்படுத்தலின் அரசியல் துறையைக் குறிக்கும் நிகழ்வுப் போக்கு தொடங்கப்பட வேண்டும். அந்த இடத்தில், அரசு இறுதியாக மறைந்து ஒரு கம்யூனிஸ சுய-ஆட்சி அமைப்பு ஏற்படுகின்ற வரையில் சிவில் சமுதாயம் படிப்படியாக விரிவடையும் நிகழ்வுப் போக்கு நடைபெறுகிறது.

ஆயினும், சோஷலிஸத்தின் கீழ் அரசும் அரசியல் உறவுகளும் இருக்கின்ற வரையிலும் பல்வேறு விருப்பப் பூர்வ ஸ்தாபனங்கள், கழகங்கள், கூட்டுறவுகள், உழைப்புக் குழுக்கள், தொழிற் சங்கங்கள், படைப்பாளர் கழகங்கள், அறக்கட்டளைகள் முதலியவற்றில் ஐக்கியப்பட்டுள்ள பிரஜைகள், அரசியல் முடிவுகளை மேற்கொள்ளுவதில் தமது கருத்துக்களை வெளிப்படுத்த முடியும் என்று அனுமானிக்கப்படுகிறது.

ஓர் அரசியல் முடிவு எடுக்கப்பட்ட பின், பொது மக்கள் இடையறாது அதன் மீதும், அதனுடைய அமலாக்க நிகழ்வுப் போக்கின் மீதும் கட்டுப்பாடு செலுத்துகின்றனர். எந்த ஓர் அரசியல் முடிவையும் இறுதியானதாகக் கருத முடியாது. பெரும்பான்மை வாக்குகளினால் ஒரு முடிவு ஏற்கப்படும்பொழுதெல்லாம், அதை ஒத்துக்கொள்ளாத ஒரு சிறுபான்மை எப்பொழுதும் இருந்து வருகிறது. விமர்சனம் செய்வதற்கும், தனது விமர்சனத்தை பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும் இந்த சிறுபான்மைக்கு உரிமை வழங்கப்பட வேண்டும். சோஷலிஸ சமுதாயத்தின் சகஜமான செயல்பாட்டினுடைய ஓர் இன்றியமையாத நிபந்தனையாகும் இது.

மாற்றமடைந்துள்ள நிலைமைகளும் புதிய விவரங்களும், கூடுதல் சர்வாம்ச ரீதியான வாதங்களும் பின்னர் பெரும்பான்மையோரை மற்றொரு முடிவுக்கு ஆதரவாக வெல்ல முடியும்.

வடக்கு நோக்கிச் செல்லும் நதிகளின் போக்கைத் திருப்ப வேண்டுமென்ற சில அரசு திணைக்களங்களின் தவறான முடிவுக்கு எதிராகப் பொது மக்களின் இயக்கம் நடைபெற்றதைத் தொடர்ந்து, அந்த முடிவைக் கைவிடுவதென்று அண்மையில் எடுக்கப்பட்ட முடிவு இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும்.



புதிய சோஷலிஸ அமைப்பின் கீழ் அரசுக்கும் மக்கள் சமுதாயத்திற்கும் இடையிலான உறவுகள், வரலாற்றின் முந்திய கால கட்டங்களில் அவற்றிடையே இருந்த உறவுகளைச் சார்ந்துள்ளது. நன்கு வளர்ச்சியடைந்த முதலாளித்துவமும் நன்கு வளர்ச்சியடைந்த மக்கள் சமுதாயமும் உள்ள ஒரு நாட்டில் குறைவான வேதனையுள்ள வழியில் சோஷலிஸத்திற்கு மாறிச் செல்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. அத்தகைய ஒரு நாட்டில் சோஷலிஸத்திற்கு அது மாறிச்சென்றதற்குப் பின்னால், . சமுதாயம், தனிநபர் மற்றும் அரசுக்கு இடையிலான உறவுகள் பெருமளவுக்கு மார்க்சிய அரசியல் தத்துவத்திற்கு இசைவானதாக இருக்கும்.

ஆனால், ருஷ்யாவில் இருந்ததைப் போன்று, பழைய அமைப்பில் உள்ளார்ந்துள்ள வாய்ப்பு வளங்கள் பூரணமாக வளர்ச்சியுறாத ஒரு நாட்டில் புதிய சமூக-பொருளாதார அமைப்புக்கு மாறிச் செல்வதற்கு வரலாறு ஒரு வாய்ப்பை அளிக்கும்போது நமக்கு முன் தோன்றும் சித்திரம் முற்றிலும் வேறானதாகும்.

சமுதாயத்தின் பொருளாதார, சமூக, கலாசாரத்துறைகள் போதுமான அளவு வளர்ச்சியடையாதிருக்கும் நிலைமையில், புதிய அமைப்புக்கு மாறிச் செல்வதானது முதலில் மேற்கட்டமைப்பினுள் செய்யப்படுகிறது. புதிய சோஷலிஸ அரசுதான், நடைமுறையில் ஒரு தீவிர உடைப்பை நிறைவேற்றவும், சமுதாயத்தின் பொருளாதார, சமூக, கலாசார வாழ்க்கையை மறுகட்டமைப்புச் செய்வதற்கும் பணிக்கப்படும் ஒரே சக்தியாகும். பழைய மக்கள் சமுதாயத்தின் நிலைத்திருக்கவல்ல முளைகளும்கூட, ஒரு புதிய வாழ்வை நிர்மாணிப்பதிலிருந்து அனேகமாக, முற்றிலும் விலக்கிவைக்கப்படுகின்றன. ஏனெனில், அவை பழைய அமைப்புடன் ஆழமாக இணைந்திருந்தன.

அத்தகைய நிலைமைகளில்—புதிய அரசு நிகழ்வுப்போக்கை எந்த அளவு வேகப்படுத்த விரும்பினாலும் இரு முக்கிய அம்சங்கள் மக்கள் சமுதாயம் விரைவாக முன்னேறுவதை சிக்கலாக்குகின்றன. முதலாவதாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் பிரமாண்டமான கடமைகளும், அதை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பகைவர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டிய அவசியமும் அரசு அதிகாரத்தை முன்னிலும் வலுவாக மையப்படுத்துவதற்கும், அரசின் உரிமைகள், அதிகாரங்கள், குறிப்பாக அதனுடைய அடக்குமுறை அமைப்புகள் விரிவுபடுத்தப்படுவதற்கும் பங்காற்றுகின்றன. இரண்டாவதாக, மிகப் பெரும்பான்மையான மக்கள் கலாசார ரீதியிலும் கல்வித் துறையிலும் பின்தங்கியவர்களாக இருக்கின்றனர். அரசி

யல் பண்பாடு இல்லாதவர்களாக இருக்கிறார்கள், இதனால் வளரும் சமுதாயத்தின் மீதும் அதன் ஸ்தாபனங்கள் மீதும் அரசு இடையறாது மேற்பார்வை செலுத்த வேண்டியதை அவசியமாக்குகிறது, மேலும் குடும்பங்களினுள் உள்ள உறவுகள் கூட உள்ளிட்டு, அரசின் செல்வாக்கு மண்டலத்தை விரிவுபடுத்துகிளது.

இந்த நிலைமையில், பன்முக சமூக உயிரமைப்பு மாமூலாகச் செயல்படுவது நொறுக்கப்பட்டு, சமுதாயம், அவசரப் பிரச்னைகளைத் தானாகவே வரையறுத்துத் தீர்வுகாண முடியாததாகிறது. எனவே, அரசு தனது சொந்த செயல்பாடுகளையும் மக்கள் சமுதாயத்தின் செயல்பாடுகளையும் மேற்கொள்கிறது.

இதன் விளைவு மிகவும் தெளிவானதே. அரசு மீண்டும் சமுதாயத்தையும் தனிநபரையும் விழுங்கிவிடுகிறது, ஏனெனில் அது அவர்களின் பணிகளையும கோரிக்கைகளையும் வரையறுத்து, அதனுடைய முடிவுகள் அவ்வாறே தட்டாது நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்று ஆணையிடுகிறது.

பொருளாதார, கலாசாரச் செயல்பாடுகளோடுகூட, புரட்சிக்குப் பிந்திய அரசு ஒரு புதிய மக்கள் சமுதாயத்தை உருவாக்குவதற்குப் பணியாற்ற வேண்டும், பொருளாதார, சமூக-கலாசார விவகாரங்களில் அரசின் தலையீட்டைப் படிப்படியாகக் குறைக்க வேண்டும், சுய விருப்பக் கழகங்களையும் சங்கங்களையும் பேணி வளர்க்க வேண்டும்; மக்களின் படைப்பாற்றல்களைப் பயன்படுத்தக் கூடிய புதிய அமைப்புகள் உருவாவதற்கு உதவ வேண்டும்; பல்வேறு பிரச்னைகளுக்குத் தீர்வுகாண வேண்டும். மக்கள் சமுதாயத்தின் வலிமை வளர்ச்சியடையும் போது, அரசின் மேற்பார்வைச் செயல்பாடு படிப்படியாகக் குறைந்த பட்சமான அளவுக்கு சுருக்கப்பட வேண்டும். அரசே சமுதாயத்தின் செயல்பாடுகளில் ஒன்றாக வேண்டும்; தத்துவத்தில் சுட்டிக்காட்டியிருப்பது போல், சமுதாயத்தின் நம்பகமான கட்டுப்பாட்டின் கீழ் அது செயல்பட வேண்டும். மார்க்சியப் பெரு நூல்கள், இதை, அரசு படிப்படியாகச் சுருங்கி மறைந்து போவதன் ஒரே சாத்தியப்பாடாகக் கருதின.

சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குரிய நிலைமைகளை வழங்குவதற்கு சாத்தியமான ஒரு கால கட்டம் சோவியத் வரலாற்றில் இருந்தது. அதுதான் புதிய பொருளாதாரக் கொள்கை (என். இ. பி.) காலகட்டமாகும். அந்த சமயத்தில் லெனினுடைய கொள்கையின் நோக்கம், தனிநபர்களுக்கும் தனித் தொழில் குழுக்களுக்கும் ஓரளவு பரவலான எல்லைகளுக்குள், சமுதாயத்தில் சோஷலிஸ உறவுகள் இருந்துவரும் நிலைமையில், வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் படைப்பாக்க முன்முயற்சியை வெளிப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பை உத்தரவாதம் செய்வதாக இருந்தது. ஆயினும் இறுதியாக ஸ்டாலினுடைய குழு செய்த தேர்வு,



நாட்டை, சமூக வாழ்வின் எல்லாத் துறைகளையும் முழுமையாக இராணுவ ரீதியான கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதற்கு இட்டுச் சென்றது. மற்றும் தனி நபர்களுக்கும் குழுக்களுக்கும் தமது அபிப்ராயங்களை—இது மேலிருந்து அனுமதிக்கப்பட்டாலொழிய வெளிப்படுத்துவதற்குரிய எல்லா வாய்ப்புக்களையும் ஒழித்துக்கட்டியது.

ஜனநாயக ஆட்சியின் சாதாரணக் கோட்பாடாகிய ''தடை செய்யப்படாதது யாவும் அனுமதிக்கப்படுகிறது'' என்பதற்கு பதிலாக ''அனுமதிக்கப்படாதது யாவும் தடைசெய்யப்படுகிறது'' என்ற கோட்பாட்டிற்கேற்ப சோவியத் மக்கள் வாழ வேண்டியிருந்தது.

ஆக்டன் பிரபுவின் நன்கு அறிமுகமான முதுமொழியின்படி, எந்த அதிகாரமும் மனிதனை ஊழலுக்கு ஏதுவாக்குகிறது, ஆனால் முழு அதிகாரம் மனிதனை முழுமையாக ஊழலுக்கு ஏதுவாக்குகிறது. அரசு அதிகாரத்தை பயனுறுதி கட்டுப்பாட்டின் கீழ் வைக்கக் கூடிய, சிவில் சமுதாயத்தின் நன்கு வளர்ச்சியடைந்த நிறுவனங்கள் ஏதும் இல்லாமலிருந்ததால், ஸ்டாலின், பிரெஞ்சு அரசியல் நிபுணர் டாக்குவில்லி 19ம் நூற்றாண்டில் மிகவும் அச்சத்துடன் எழுதியதை—அதாவது அனைவரும் சமுதாயத்தில் சமமாயினர், அதே அளவுக்கு அரசு அதிகாரத்தின் முன்னே சக்தியற்றவர்களாயினர் என்பதை—நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

இங்கு கீழ்வரும் கேள்வியை நாம் கேட்கலாம்: அரசின் நிர்வாகத்தை நடத்துவதில் எல்லோரும் ஈடுபடுவதை மார்க்சியத் தத்துவம் முன்நிர்ணயம் செய்துள்ளது. இது அரசு மறைவதற்கு இட்டுச் செல்ல வேண்டும். அப்படியெனில், சோவியத் அரசியல் அமைப்பின் முன்னேற்றம் எவ்வாறு அதிகாரத்தினின்றும் மக்கள் வேறுபட்டுப் பிரிந்து போவது ஏற்பட்டது?

அரசை நிர்வகிப்பதில் அனைத்து மக்களையும் ஈடுபடுத்தும் மார்க்சியக் கருத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சோவியத் யூனியன் ஓர் அமைவை உருவாக்கியுள்ளது, இது அனைத்து மக்களின் பொதுவான மற்றும் ஒருமித்த சித்தத்தை வெளிப்படுத்துவதற்றென்று உருவாக்கப்பட்டது.

மாவட்ட மட்டத்திலிருந்து மேல்நோக்கி, எல்லா வாக்காளர்களும் தமது பிரதிநிதியை ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கின்றனர். வாக்காளர்களிடமிருந்து ஆணைகளைப் பெறும் பிரதிநிதிகள், எடுக்கப்படும் முடிவுகள் விஷயத்தில், ஆணைகளுக்கு ஏற்ப வாக்களிக்கின்றனர்—பொதுவாக ஒருமனதாக ஒவ்வொரு சோவியத்தின் பிரதிநிதிகளுக்குப் பின்னே, ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தின், நகரத்தின், பிராந்தியத்தின், குடியரசின், அல்லது சோவியத் ஒன்றியத்தின் வாக்காளர்கள் உள்ளனர்: பிரதிநிதி, தமது வாக்காளர்களின் குரலை ஒலிப்பவர் மட்டுமேயாகும். அனைத்து மக்களும் சோவியத்துகளின் நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடாது இருந்து

வருவதாகத் தோன்றுகிறது, எனவே, எல்லா பொது விவகாரங்களையும் மக்கள் நேரடியாக நிர்வாகம் செய்வதாகிறது.

ஆயினும், இந்த வகை நிர்வாகமானது குறைந்தபட்சம் ஆரம்பநிலையிலுள்ள சிவில் சமுதாயம் உள்ள ஒரு நாட்டில் அசாத்தியம் என்பது தெளிவு. ஏனெனில். இத்தகைய சமுதாயத்தில், எப்போதும், தமது குறிப்பான நலன்களை — சொத்து, தேசிய, சமூக, வர்க்க நலன்கள்—உடைய பல்வேறு குழுக்கள் இருப்பார்கள்: இது ஒரு பொதுவான. தனியொரு சித்தம் உருவாவதைத் தடுக்கிறது. இந்த பாணியை அறிமுகப்படுத்துவதற்கு, மக்களை அவர்களுடைய சொத்துக்கள் அல்லது அவர்கள் ஓர் இனக்குழுவுடன். அல்லது ஒரு சமூகப் பகுதி அல்லது ஒரு வர்க்கத்துடன் சேர்ந்தவர்களாயிருப்பதிலிருந்து எழும் குறிப்பிட்ட எல்லா நலன்களிலிருந்தும் பிரிக்க வேண்டியது அவசியமாகும். இந்த நலன்கள் யாவற்றையும், எல்லோருக்கும் பொதுவானதாக இருக்கும் ஒருவகைப்பட்ட ஆக உயர் நலனில் சங்கமிக்கச் செய்வது அவசியமாகும்.

அரசு தான் அனைத்து சமூக, தேசிய மற்றும் பிற குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது; இந்த ஒரே காரணத்தினால்தான் அது ஒரு பொதுவான, தனியொரு சித்தத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பைப் பெற்றது. அத்தகைய ஒரு சித்தத்தை உருவாக்கும் லட்சியப் பூர்வமான அமைவில் வெவ்வேறான நலன்கள் ஊடுருவுவதைத் தடுக்கவல்ல நிலைமைகளை ஏற்படுத்துவது அவசியமாகும், எனவே கீழிருந்து மெய்யான வாழ்க்கை, முடிவு செய்யும் நிகழ்வுப்போக்கில் தலையிடாது.

சொத்துடைமையிலிருந்து மக்கள் பிரிக்கப்பட்டார்கள், அது பொதுவுடைமையாக்கப்பட்டது. சமூக—வர்க்க, மற்றும் இன உறவுகள் சம்பந்தப்பட்ட எல்லா முக்கிய பிரச்னைகளும் தீர்க்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது, அந்தப் பிரகடனம் பொதுமக்கள் அனைவரின் உணர்வின் மற்றும் குறிப்பாக தனித்தனிப் பகுதிகள், குழுக்களின் உணர்வின் ஓர் ஒருங்கிணைந்த கூறு ஆகியது. அது எல்லா சிரமங்களையும் போக்கி, நாடு தழுவிய சுய ஆட்சியின் லட்சிய வகை மாதிரி செயல்படவைக்கப்பட்டது. வாழ்க்கை முற்றிலுமாக வெளியேற்றப்பட்டுவிட்ட ஓர் அமைப்புதான் ஒரு சமுதாயத்தில் லட்சியப் பூர்வமாகச் செயல்பட முடியும். மக்களைப் பொறுத்தமட்டிலும், அவர்கள், தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளைக் கண்டுகொள்வதில்லை. திடீரென்று ஒருநாள், எல்லா சோவியத்துக்களும் கலைக்கப்பட்டாலும்கூட, பலர் அது குறித்து எவ்வித கவனமும் செலுத்தாமற் போகலாம் என்று நான் கருதுகிறேன்.

நாம் ஆரம்பத்தில் கூறிய, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்திற்கு மாறிச்செல்வதை மீண்டும் பார்ப்போம்.



சோஷலிஸ சமுதாயத்தில் அரசியல் அதிகாரம் பயனுறுதியாக ஒருங்கிணைக்கப்படுவதற்கு, மார்க்சிய அரசியல் தத்துவம். முதலில் பல கேந்திரமான கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியிருந்தது. யார் ஆட்சி செய்கிறார்? வாக்காளர்களுக்கும் அவர்களது பிரதிநிதிகளுக்கும் இடையில் என்ன உறவுமுறைகள்? சட்டமியற்றும் அமைப்புக்களுக்கு யார் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்?

மக்கள்தான் நாட்டை ஆள வேண்டுமென்று எல்லா முக்கிய பூர்ஷ்வா தத்துவங்களும் கூறுகின்றன. ஆனால் எல்லா மக்களும் முக்கிய அரசியல் முடிவுகளை விவாதிப்பதிலும், ஏற்பதிலும் பங்குகொள்ள முடியாததாகையால், மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தமது பிரதிநிதிகள் மூலம் நாட்டை ஆள்கின்றனர்.

மக்களின் பிரதிநிதித்துவ அரசு எனும் கோட்பாட்டை நிறைவேற்றுவதற்கான முதலாவது நடைமுறை முயற்சி, அமெரிக்க ஜனநாயகமாகும். நவீன காலத்தின் அரசியல் நடைமுறை எண்ணற்ற பிரச்னைகளையும், சிரமங்களையும் தோற்றுவித்துள்ளது. இன்று வரையிலும் பூர்ஷ்வா அரசியல் சித்தாந்தத்தினால் அதற்குத் தீர்வுகாண முடியவில்லை.

மக்களாட்சியின் லெட்சிய பூர்வமானது என்ற தோற்றங்கொண்டிருந்த அமைவு தத்துவார்த்த ரீதியில் எதிர்பார்க்கப்பட்டதற்கு நேர் எதிரான பலன்களைக் கொடுக்கிறது. சில சந்தர்ப்பங்களில் மக்களின் மெய்யான நலன்களும் விருப்பங்களும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்பதை நான் தயக்கமின்றி ஒப்புக்கொள்கிறேன்.

மக்கள்தான் ஆக உயர் அதிகாரத்தின் மூலாதாரம் என்று மார்க்சிய அரசியல் தத்துவமும் நம்புகிறது. ஆயினும், மார்க்சியத்தின் மூலவர்கள், புரட்சிக்குப் பிந்திய ஒரு சோஷலிஸ சமுதாயத்தில் ஆட்சியை அமைக்கும் ஒரு ஸ்தூலமான ஏற்பாட்டை விரித்துரைக்கவில்லை.

பாரிஸ் கம்யூனின் அனுபவம் குறித்து மார்க்ஸ் செய்த பகுப்பாய்வு நடைமுறையில், மார்க்சியத்தின் பொதுவான விதிகளை செயலாக்கவிருந்தவர்களுக்குத் தீங்கையே ஏற்படுத்தியது.

பாரிஸ் கம்யூன் எந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டதோ, அவை போலிஷ் ஜனநாயகத்தின் கோட்பாடுகளுக்கும், ரூஸ்ஸோவின் பரிந்துரைகளுக்கு இசைவான அரசியல் ஒழுங்கமைப்பின் கோட்பாடுகளுக்கும் நெருக்கமானதாக இருந்தன. பாரிஸ் நகரம் முற்றுகைக்கு உள்ளாகியிருந்தது; இடம் மிகவும் சொற்பமானதாக இருந்தது; மிகவும் சுருக்கமான நபர்களே பங்கெடுத்துக் கொண்டார்கள்; மிகவும் குறுகிய காலமே பிடித்திருந்தது—இத்தகைய நிலைமையிலிருந்த பாரிஸ் கம்யூன், உற்பத்தியாளரை அந்நியப்படுத்தாத ஓர் அரசு

அமைப்பை நிறுவ முடிந்தது. கம்யூனின் சமூக உயிரமைப்பில் தனி மனிதனும் சமுதாயமும், அரசும் மீண்டும் ஐக்கியப்பட்டனர்.

நடைமுறையில் இவ்வாறுதான் அது ஏற்பட்டது. பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், கம்யூனின் கவுன்சிலுக்கு மக்களின் கோரிக்கைகளைத் தெரிவித்தனர். கவுன்சில் தீர்மானங்களை நிறைவேற்றியது: அதன் உறுப்பினர்கள் அவற்றை அமலாக்கி, பின்னர் அதை கவுன்சிலுக்கும் மக்களுக்கும் தெரியப்படுத்தினர். ஆயினும் கவுன்சிலில் அவர்களது பணி, அவர்களை தொழில்துறை அரசியல்வாதிகளாக மாற்றவில்லை; ஏனெனில், அவர்கள் முன்புபோலவே கைவினைஞர்களாகவும், அச்சிடுபவர்களாகவும், வர்த்தகர்களாகவும், வர்ணந்தீட்டுபவர்களாகவும் இருந்தனர். கம்யூன் பிரதிநிதித்துவ அமைப்புகளைக் கொண்டிருந்தது, ஆனால் நாடாளுமன்ற நடைமுறை ஒரு விசேட அமைப்பாக சட்டமியற்றும் பணி, அமலாக்கும் பணியென்ற பிரிவினை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு சலுகைவாய்ந்த நிலை ஆகியவை இல்லாமலிருந்தன என்று குறிப்பிட்ட போது லெனின் இதைத்தான் அர்த்தப்படுத்தினார்.

பிரதிநிதித்துவ அரசு வடிவத்திலிருந்து எழும் எல்லாப் பிரச்னைகளுக்கும் தீர்வுகாணப்பட்டது. அரசின் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துவதற்கும், அதிகாரம் ஒரு நபரின் கைகளில் குவிவதைத் தடுப்பதற்கும், தனி மனிதனின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் உத்தரவாதம் செய்வதற்குமான ஓர் அமைவை உருவாக்கும் ஆயிரமாண்டுக் கால அனுபவத்தைக் கம்யூன் தூக்கியெறிந்ததில் வியப்பில்லை.

வருந்தத்தக்க முறையில், சோவியத் யூனியனில் அரசியல் நிர்வாகத்தின் ஒழுங்கமைப்பாளர்கள் கம்யூனின் பாதையை மேற்கொண்டனர். ஏனெனில் மிகவும் நெருக்கடியான நிலைமைகளில் தோன்றிய அதனுடைய அனுபவத்தை அவர்கள் அங்கீகரித்து, அது எல்லா நாடுகளுக்கும் பொதுவானதென்றும், நாடு முழுமையிலும் பரப்புவதற்குத் தகுதிவாய்ந்ததென்றும் கருதினர்.

சாதாரண மக்களால் தோற்றுவிக்கப்பட்ட சோவியத்துக்களில் தொழிலாளர், விவசாயிகள் மற்றும் படைவீரர்களின் பிரதிநிதித்துவம் என்னும் கருத்து மிக மிக முக்கியமானதாகும். முக்கியமான விஷயங்களின் மீது தமது கருத்தைத் தெரிவிப்பதற்கு மக்களின் பிரதிநிதிகளுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அவர்களது அபிப்ராயங்கள் மக்களின் பொதுவான சித்தத்தை உருவகப்படுத்தின. அந்த சித்தத்தை வெளிப்படுத்துவதன் மூலம், புதிய ஆட்சி, அடிப்படையாகவே புதிய முடிவுகளுக்கு சட்டத்தின் வலிமைக் கொடுத்தது.

அவை, முக்கியப் பிரச்னைகள் மீது ஒருவகையான பொது வாக்கெடுப்பாகும் என்று நான் நினைக்கிறேன். அனேகமாக எல்லா அரசியல் அமைப்பு



களும் — மக்களரசுக் கோட்பாட்டின் மீது அமைந்த— நாடுதழுவிய கருத்துக் கணிப்புகளை இன்று பயன்படுத்துவதை நாம் அறிவோம். ஆனால் அற்ப விஷயங்களுக்காகப் பொது வாக்கெடுப்பை ஏற்பாடு செய்வது பற்றி யாரும் ஒரு போதும் நினைக்கமாட்டார்கள். நடப்பு சட்டமியற்றும் மற்றும் அரசு பரிபாலனப் பிரச்னைகள், நிர்வாக உறுப்புக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் இடையறாது செயல்படும் பிரதிநிதித்துவ அதிகார அமைப்புகளால் தீர்வு காணப்படுகின்றன.

ஆயினும், சோவியத்துக்களின் கூட்டத் தொடர்களின் போது அவற்றின் நடவடிக்கைகள் நடைமுறையில் பொது வாக்கெடுப்புகளாகவே மாற்றப்பட்டன, அவற்றின் உறுப்பினர்கள் மற்றவர்களின் முடிவுகளை அங்கீகரித்தனர்.

அதே சமயத்தில், சோவியத் சமுதாயம், ஆக உயர் அரசு உறுப்புக்களை ஒழுங்கமைக்கும் பிரதிநிதித்துவ அரசு வடிவத்தைக் கைவிடவில்லை. ஆயினும் பிரதிநிதியானவர், நேரடியான ஜனநாயகத்தையும், பொதுவான சித்தத்தின் வெளியீட்டையும் உறுதிப்படுத்தும் அமைவின் ஒரு பாகமேயாகும். பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் அரசியல் அமைப்புகளில் அத்தியாவசியமாகக் கருதப்படும், குறைந்தபட்சம் மூன்று செயல்பாடுகள் பிரதிநிதிகளிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளன. முதலாவதாக, சமூக வாழ்க்கையின் முக்கிய பிரச்னைகள் மீதான தமது மசோதாக்களை பிரதிநிதி சமர்ப்பிப்பதில்லை; இரண்டாவதாக, அவர், நிர்வாக உறுப்புக்களின் செயல்பாடுகள் மீது கட்டுப்பாடு செலுத்துவதில்லை; நடப்பு அரசியல் நிகழ்வுப் போக்கிலும் பங்கெடுத்துக் கொள்வதில்லை: மூன்றாவதாக, தன்னைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களின் ஆணைகளுக்கு அவர் கடப்பாடுடையவராதலால், சமுதாயத்தின் நலனுக்காகத் தனது வாக்காளர்களின் சில நலன்களை அவர் எப்போது தியாகம் செய்ய முடியும், அல்லது அதற்கு நேர் எதிரான முறையில்தான் எப்பொழுதும் செயல்பட வேண்டும் என்பதை முடிவு செய்வதற்கு அவர் சுதந்திரமாக இல்லை.

சுருங்கக் கூறின், பிரதிநிதிக்கு எல்லா சுதந்திரமும் பறிக்கப்பட்டுள்ளது. இந்தக் காரணத்தினால், அரசியல் அமைப்பு அவருக்கு உரிய தகுதியை அளிப்பதில்லை. சட்டமியற்றும் அதிகாரம், ஒரு தொழில் முறையற்ற நடவடிக்கைத் துறையாக மாற்றப்பட்டுள்ளது. சட்டமியற்றும் அதிகாரம், பல நூற்றாண்டுகளாக, முதலில் உயர் சமூக முடியாட்சிகளின் கருவிலும், பின்னர் மேலை நாடுகளில் பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சிகளின் அரசியல் அமைப்புகளிலும் உருவாக்கப்பட்ட அதன் நிரந்தரச் செயல்பாடுகளையும் உரிமைகளையும் இழந்துவிட்டது.

சோவியத் சமுதாயம், நேரடியான ஜனநாயகம் மற்றும் பிரதிநிதித்துவ ஜனநாயகம் ஆகியவற்றின் கோட்பாடுகளுக்கு இடையில் ஒரு சம

ரசத்தை ஏற்படுத்துவதில் தவறியுள்ளது. இதன் விளைவாக, சோவியத் யூனியனில் உள்ள அரசியல் அமைப்பில் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலிருந்தும் சிறந்த மக்கள்—பால் பண்ணையில் பணி புரிவோரும், டர்னர்களும், சுரங்கத் தொழிலாளிகளும், டாக்டர்கள் அல்லது நடிகர்களும்—இவர்கள் அரசியலிலிருந்து மிகவும் அப்பாற்பட்டவர்களாக இருந்தபோதிலும்—சமுதாயத்தின் பொதுவான சித்தத்தை ஓர் ஆண்டில் சில நாட்கள் வெளிப்படுத்துகின்றனர்; நிர்வாக அமைப்புகளின் அதிகார வர்க்கம் சமர்ப்பிக்கும் முடிவுகளை அங்கீகரிப்பதன் மூலம் இதைச் செய்கின்றனர். சோவியத் யூனியனில் சட்டமியற்றும் அதிகாரம் ஓர் ஆரம்ப நிலையிலும், உறுதியான உருவமற்ற நிலையிலுமே இருக்கிறது.

இந்த நிலைமையிலிருந்து மீள்வதற்கு வழி என்ன? விவரங்களுக்குள் போகாமல் மக்கள் சமுதாயத்தின் அமைப்புகளை உருவாக்குகின்ற, மற்றும் அரசை அவற்றுக்குக் கீழ்ப்பட்டதாக்குகின்ற தீவிர பொருளாதார, அரசியல் சீர்திருத்தத்தின் பிரதான திசைவழிகளை மட்டுமே நாம் சுட்டிக்காட்ட முடியும். இதற்கு, சோவியத் மக்கள், அரசை நிர்வகிப்பதில் எல்லோரும் நேரடியாக ஈடுபடுவதே மக்களாட்சி என்ற கருத்தைக் கைவிட்டாக வேண்டும். ஜனநாயக ஆட்சியைப் பயனுறுதியாக ஒழுங்கமைப்பது, அதில் எல்லோரும் யாந்திரீகமாக ஈடுபடுவதன் மூலமாக அல்ல, மாறாக, பிரதிநிதித்துவ ஆட்சியின் ஒரு செயல்முறை அமைப்பை உருவாக்குவதன் மூலம் சாத்தியம் என்ற உண்மையை அவர்கள் உணர்ந்து வருகின்றனர். அதில் சட்டமியற்றும் செயல்பாடுகளுக்கும் நிர்வாகச்செயற்பாடுகளுக்கும் இடையில் தெளிவான பிரிவினை இருக்கும்.

ஃ ஃ

ஒரு மக்கள் சமுதாயத்தைக் கட்டியமைத்து அரசை அதற்குக் கீழ்ப்பட்டதாகச் செய்யாமல், மக்களின் படைப்பாற்றல் முழுமையையும் வெளிப்படுத்துவதென்ற பெரஸ்த்ரொய்காவின் லட்சியத்தை அடைவது பற்றி நினைத்துப் பார்க்க முடியாது. இன்று அது அரசின் இறுகலான பிடியில் ஸ்தம்பித்துப் போயுள்ளது. ஒவ்வொரு தனி மனிதனின் ஆக்கபூர்வமான ஆற்றல்களை வெளிப்படுத்தாமல் இதை ஒருபோதும் அடைய முடியாது. எவ்வாறு சுதந்திரமான, சுயேச்சையான மக்கள் சமுதாயம் ஜனநாயக அரசியல் அமைப்பின் மையக்கருவாக இருக்கிறதோ அது போன்றே சுதந்திரமான தனி மனிதன்தான் மக்கள் சமுதாயத்தின் மையக்கருவாகும்.

கொன்ஸ்தாந்தின் வார்லமேசவ்
டி. எஸ்ஸி (வரலாறு)

# மக்களின் சோஷலிஸ சுய-அரசாங்கம்

''மக்கள் தம்முடைய சொந்த விவகாரங்களை மெய்யாகவே நடத்தும்போது மாத்திரமே, இலட்சோப லட்சம் மக்கள் அரசியல் வாழ்வில் ஈடுபடுகின்றபோது மாத்திரமே சோஷலிஸ அமைப்பு வெற்றிகரமாக வளர்ச்சியடைய முடியுமென்பதைத் தத்துவத்திலிருந்தும் எம்முடைய விரிவான அனுபவத்திலிருந்தும் நாம் அறிவோம். லெனின் கூறியதுபோன்று இதுதான் உழைக்கும் மக்களின சுய-அரசாங்கம், சோவியத் அதிகாரததின் சாரமும அதுதான்.''

—மிகையில் கொர்பச்சேவ்

அரசு மற்றும் பொது விவகாரங்களை நடத்துவதிலும் உற்பத்திப் போக்குகளிலும் மக்களின் பரிபூரணமான பங்கேற்பையே சுய-அரசாங்கம் பொருள்படுத்துகிறது. சுய-அரசாங்கப் போக்குடன் தொடர்புபட்டுள்ள சோஷலிஸ சமுதாயத்தினது அரசியல் அமைப்பின் செயற்பாடு, தலைமை தாங்கும் சக்தி என்ற வகையில் கம்யூனிஸ்ட் கட்சியினதும் மக்களின் சோஷலிஸ சுய-அரசாங்கத்தின் பிரதான கண்ணி என்ற வகையில் மக்கள் பிரதிநிதிகள் சோவியத்துக்களதும் அவற்றின் பயனுறுதிமிக்க சமூக மூலக்கரு என்ற வகையில் உழைப்புக் கூட்டினதும் பல்வேறு பொது வாழ்வு ஸ்தாபனங்களதும் செயற்பாட்டை உள்ளடக்குகிறது.

## லெனினின் பங்குப்பணி

மார்க்ஸ், எங்கெல்சின் கருத்துக்கள் வெகுஜனங்களது புரட்சிகர ஆக்கபூர்வத்தன்மையினால் ஸ்தூலமாக்கப்பட்டு, ஓரளவுக்குச் சீராக்கப்பட்டன; லெனினது ஆக்கங்களில் மேலும் விஞ்ஞானபூர்வமாக ஆதாரப்படுத்தப்பட்டன, விரிவாக்கப்பட்டன.

சோவியத் ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளின்போதும் சுய-அரசாங்கம் பற்றிய பிரச்னை

கட்சியில் உயிர்த்துடிப்புடன் விவாதிக்கப்பட்டது.

இது தொடர்பாக, ஒரு புதிய, சோஷலிஸ அரசை—பொருளாதாரத்தை நடாத்துவதற்கும் சமூக போக்குகளின் மீது வெகுஜனங்களின் தாக்கத்தை உறுதி செய்வதற்குமான ஒரு பெரும் கருவியை—நிர்மாணிக்க கம்யூனிஸ்ட்டுகளும் தொழிலாளர்களும் விவசாயிகளும் கற்றுக் கொள்வதற்கு உரிய தருணம் வந்து விட்டது என்று லெனின் உறுதியாகக் கூறினார். மக்களது சுய-அரசாங்கத்தின் வளர்ச்சி மற்றும் ஜனநாயகத்தை ஊக்குவிக்கும் முகாந்திரத்தில் அத்தகையதோர் ராஜ்யத்தை நிர்மாணிக்கும் எல்லா பிரச்னைகளையும் அவர் கருத்திற்கொண்டார்.

சுய-அரசாங்கத்தை ஒழுங்கமைக்கும் பிரச்னையின் பல்வேறு தோற்றப்பாடுகளின் மத்தியில், ஜனநாயகத்தின் வளர்ச்சி மற்றும் பொருளாதார, சமூகக் கடமைகளுக்குத் தீர்வுகாண்பதுடன் பொருளாதாரத்தை நடத்திச் செல்வதிலான ஒத்துழைப்பே லெனினின் கவனத்தைப் பெருமளவுக்கு ஈர்த்தது. புரட்சியின் ஆரம்ப நாள் தொடக்கம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மக்கள் ஜனநாயகத்தை ஊக்குவிப்பதற்கும் இடையிலான பிரிக்க முடியாத பிணைப்பாக விளங்கியது சோஷலிஸ சுய-அரசாங்கத்தினது வளர்ச்சியின் தீர்க்கமான மூலப்பிரமாணமாகும்.

சமூக உறவுகளின் அமைப்பில் ஜனநாயகத்தின் இடத்தை விளக்கிக் கூறுகையில் லெனின் அதை பின்வருமாறு தெளிவுபடுத்தினார்; ''...பொதுவாகவே அரசியல் மேற்கட்டுமானம் என்ற வகையில் ஜனநாயகத்தின் ஒவ்வொரு வகையும் (வர்க்கங்கள் ஒழிக்கப்படும் வரையில், வர்க்க மறற சமுதாயம் ஸ்தாபிக்கப்படும் வரையில் நிச்சயம் இருந்தாக வேண்டும்) உற்பத்திக்குப் பணிபுரிகிறது. குறிப்பிட்ட சமுதாயத்தில் உற்பத்தி உறவுகளின் மூலம் அது இறுதியாகத் தீர்மானிக்கப்படுகிறது.'' சோஷலிஸ ஜனநாயகம் ''உழைக்கும் மக்களின மிகப் பெரும்பான்மையானோர் அரச நிர்வாகத்தில் மெய்யாகவே பங்கேற்பதாகும்'' என்று லெனின் வலியுறுத்தினார்.

அரசாங்கம் மற்றும் சுய-அரசாங்கம் ஓர் மார்க்கம் என்ற வகையில் ஜனநாயகம் அதன் உள்ளார்ந்த சிறப்பம்சங்களைக் கொண்டிருக்கிறது. இவை மத்தியத்துவப்படுத்தலும் பரவலாக்கமும், கண்டிப்பொழுங்கும் முன்முயற்சியும், கூட்டுத் தலைமையும் தனிமனித நிர்வாகமும், திறமையான நிர்வாகமும் கடமைபூர்வமான நிறைவேற்றமும் ஆகும். மேலும், அது முகாமையின் நிர்வாக மார்க்கங்கள், அதாவது ஒழுங்கு, பணிப்புரை, திசைவழி, பொருளாதார மார்க்கங்கள் ஆகியன மூலம் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது; இவற்றின் நடைமுறைப்படுததல் உற்பத்தியிலும் சமூக-அரசியல் வாழ்விலும் உழைப்புக் கூட்டுக்களும் தனித்தனித் தொழிலாளர்களும் வகிக்கும் ஸ்தூலமான நிலைப்பாட்டுடனும் அரசுக் கட்டமைப்பு மற்றும் பொதுவாழ்வு ஸ்தாபனங்களுடனும் தொடர்புபட்டது.



சுய-அரசாங்கத்தின் கடமை தனிநபர் ஒவ்வொருவரையும் நிர்வாகத்துக்கு உரியவராக்குவதும் தனது சொந்த ராஜ்யத்தின் எஜமானன் என்று அவர் தன்னை உணரச் செய்வதும் ஆகும்.

## மூன்று முன்தேவைகள்

சோஷலிஸம் பற்றிய லெனினியக் கருத்தமைப்பின்கீழ், அதனது நடைமுறைப்படுத்தலானது நாட்டின் உற்பத்திச் சக்திகளது வளர்ச்சியை முன்வைக்கிறது. லெனினால் புதுமைப்படுத்தப்பட்ட இக்கருத்தமைப்பு, அடிப்படையிலேயே புதிய வாதங்களை உள்ளடக்கியுள்ளது. ஆரம்பத்திலிருந்தே உற்பத்திச் சக்திகளின் புனருற்பத்திப் பிரச்னைக்கு பொதுவான அணுகுமுறை எடுப்பதற்கு எதிராக எச்சரிக்கும் வாதங்கள் இவை. லெனின் உற்பத்திச் சக்திகளின்பால் கவனஞ் செலுத்தவில்லை. அவற்றினது வளர்ச்சியின்பால் கவனஞ் செலுத்தினார்; ஏனெனில், இப்போக்கை சமூக முன்னேற்றத்தின் தலையாய அளவுகோலாக அவர் கருதினார். இங்குள்ள பிரச்னை, உற்பத்திச் சக்திகளின் அமைப்பில் உழைக்கும் மக்கள் வகிக்கும் இடமும் உழைப்புக் கருவிகளுடனான அவர்தம் உறவுகளும் வேலை நிலைமைகளும் அவர்தம் நலன்களும் ஆகும். நிர்வாகம் செய்வதில் உழைக்கும் மக்களைச் சம்பந்தப்படுத்தும் பிரச்னையை விருத்தி செய்கையில், உற்பத்திச் சக்திகளுடன் தம்முடைய நலன்களது உள் பிணைப்பை ஆதாரப்படுத்துகையில் தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அதன் முக்கியமான நலனை லெனின் வகுத்துரைத்தார். ''பாட்டாளி வர்க்கத்தின் தலையாய, அடிப்படை நலன் உற்பத்தியில் அதிகரிப்பைப் பெறுவதிலும் சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளில் பெருமளவு அதிகரிப்பைப் பெறுவதிலும் உள்ளது''.

இரண்டாவதாக, உற்பத்தியாளரையும் உற்பத்திச் சாதனங்களையும் இரண்டறக் கலப்பதில், முதலாளித்துவத்தின் கீழ் இருப்பவற்றைவிட முற்றிலும் மாறுபட்டதான இயல்பையும் மார்க்கங்களையும் உருவாக்காமல் மக்களின் சுய-அரசாங்கத்தை நினைத்துப்பார்க்கவும் முடியாது. இம்முறையின் பொருளாதார அடிப்படை உற்பத்திச் சாதனங்களில் சமூகச் சொத்துடைமையாகும். அது கடமைகளையும் அரசாங்கத்தின் முழு உள்ளடக்கத்தையும் புதிய உறவுகளை—ஜீவதாரப் பயன்களைப் பேணிக்காப்பதில் ஒத்துழைப்பும் கூட்டுத்துவமும்—உருவாக்கவும் புனருற்பத்தி செய்யவுமான மார்க்கங்களைத் தேடுவதையும் ஸ்தூலமாக நடைமுறைப் படுத்துவதையும் நிர்ணயிக்கிறது.

மூன்றாவதாக, சுய-அரசாங்கமானது அரசியல் அதிகாரத்துடன் உழைக்கும் மக்களை இரண்டறக் கலக்கும் ஒரு புதிய முறையை முன்வைக்கிறது, அரச அதிகாரத்தின் கட்டமைவு; அரசை நடத்திச் செல்வதில் உழைக்கும் வெகுஜனங்கள் சம்பந்தப்பட்டுள்ள விதம், தொழிற்சங்கங்கள்,

இளைஞர் ஸ்தாபனங்கள், உழைப்புக் கூட்டுக்கள் ஆகியனவற்றைப் பொறுத்தவரையில் அரசு அதிகாரத்துடனான இடைச் செயற்பாடு போன்ற பிரச்னைகள் குறித்து லெனின் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார். மேலும் இப்பிரச்னைகள் அவரது நூல்களில் விஞ்ஞானபூர்வமாக ஆதாரப்படுத்தப்பட்டன.

## அரசியலும் பொருளாதாரமும்

சோஷலிஸ அமைப்புக்கு மாறிச்செல்லும் ஒவ்வொரு சமுதாயத்தினதும் அடிப்படை நோக்கம் ஆளும் வர்க்கத்தின், அதாவது பூர்ஷ்வாக்கள் மீதான பாட்டாளிகளின் வெற்றியில் உள்ளடங்கியுள்ளது. அரசை நடத்திச் செல்லும் தன்மை மாற்றமடைந்திருப்பதால், அரசாங்கத்தின் தலையாய நோக்கம் என்ற வகையில் எந்த வர்க்கங்களின் ஆட்சியையும் பேணிக்காக்கும் அவசியம் இனியும் இல்லை. நாகரிகமுள்ள நாடுகளின் நவீன வரலாற்றில் முதல் தடவையாக அது அரசியலைக் காட்டிலும் பொருளியலையே ஒப்புயர்வற்ற வகையில் கையாள்கிறது எனலாம்.

புரட்சியினுடைய வெற்றிக்குப் பின்னர் அரசியல் தானாகவே வற்றிப்போய்விட்டது என்பதை அது பொருள்படுத்துகிறதா? இல்லை. அப்படியேதும் கிடையாது. புதிய அரசாங்க அமைப்பை ஸ்தாபிப்பதில் புதிய, கம்யூனிஸ்ட் அரசியலின் பாத்திரம் தீர்க்கமாக அதிகரிக்கிறது.

முதலாகவும் முதன்மையாகவும் அரசியலை உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி நலன்களுக்குக் கீழ்ப்படுத்துவதும் தொழில்நுட்பவியல் முன்னேற்றத்தை ஜனநாயகத்துக்கான அடிப்படையாக மாற்றுவதும் அவசியம். இதன் சாரமும் உள்ளடக்கமும் உழைக்கும் மக்களை அரசாங்கத்தில் சம்பந்தப்படுத்துவதைக் கொண்டுள்ளன.

சோவியத் யூனியனில் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் பொருளாதாரச் சீர்திருத்தம், தவிர்க்கமுடியாதது: அது சோஷலிஸ உற்பத்தி உறவுகளை முழுநிறைவாக்குவது, உழைப்புக் கூட்டின் ஒவ்வொரு உறுப்பினரிலும் பொதுச் சொத்தின் எஜமானர் என்ற உணர்வை உருவாக்குவதுடனும் விநியோகம் மற்றும் பரிவர்த்தனை உறவுகள், அரசாங்கம் பற்றிய லெனினியக் கோட்பாடுகளை முரணின்றி நடைமுறைப்படுத்துவது, யாவற்றுக்கும் மேலாக ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டை முரணின்றி நடைமுறைப்படுத்துவது ஆகியவற்றுடனும் உழைக்கும் மக்களின் ஆக்கபூர்வ முன்முயற்சியினது வளர்ச்சியுடனும் உற்பத்தியை நடாத்திச் செல்வதில் அவர்களை அதிகரித்த அளவுக்குச் சம்பந்தப்படுத்துவதுடனும் ஸ்தூலமான உறவுகளைக் கொண்டிருக்கிறது.

''நவ்சினி கொம்யூனிசம்''
சஞ்சிகையிலிருந்து.

வெலேரி தெலிஜின்
ஏபிஎன் நோக்கர்

# சட்டத்தால் ஆளப்படும் அரசின் மார்க்கத்தில்

**அரசாட்சியை ஜனநாயகப்படுத்துவது, மக்களின் விருப்பத்தைத் தெரிவிப்பதற்கான புதிய உத்தரவாதங்களை உருவாக்குவது, பிரஜைகளதும் அவர்தம் ஸ்தாபனங்களதும் உரிமைகளை வியாபிப்பது, சட்டத்துவத்தையும் சட்டத்தையும் ஒழுங்கையும் எல்லா மட்டங்களிலும் வலுப்படுத்துவது-இவைதான் சோவியத் அரசியல் முறை வளர்ந்துவரும் தலையாய மார்க்கங்கள்.**

1988ம் ஆண்டின் நடுப்பகுதியில் நடைபெற்ற 19வது அகில-ஒன்றியக் கட்சி மகாநாட்டினதும் சோவியத் ஒன்றியத்தின் மக்கள் பிரதிநிதிகள் காங்கிரஸினதும் தாக்கீதுகளில் குறிப்பிடப்பட்டதைப் போன்று, சோவியத் யூனியனில் சோஷலிஸத்துக்கும் சோஷலிஸ ஜனநாயகத்துக்கும் முழுமையாகப் பொருந்தும் வண்ணம் அரசியல் அதிகாரத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் செயற்பாட்டின் ஒரு வடிவம் என்ற வகையில் சோஷலிஸச் சட்டத்துக்கு ஏற்ப ஆளப்படும் ஓர் அரசை ஸ்தாபிப்பதற்கு இப்போக்கு இட்டுச் செல்லவுள்ளது. மக்களின் விருப்பத்தைத் தெரிவிக்கும் சட்டத்தின் மூலாதாரமும் வெற்றியுமே அதன் அடிநாதமாக விளங்கும் அம்சமாகும்.

சோவியத் யூனியனில் இக்கடமை முதல் தடவையாக முன்வைக்கப்பட்டிருக்கிறது. சட்டத்துவத்தையும் சட்டத்தையும் ஒழுங்கையும் வலுப்படுத்துவது குறித்து திரும்பத் திரும்ப எடுக்கப்படுகின்ற தீர்மானங்களிலிருந்து அதனது அடிப்படையான வித்தியாசம் என்ன?

மிகச் சமீப காலம் வரையில், சோவியத் யூனியனில் சட்டம் அரசாங்கத்தினதும், நீதிபரிபாலன மற்றும் நிர்வாகக் கட்டளைகள் போன்ற முறைகள் உள்ளிட அரசாங்கத்தின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதினதும் ஓர் கருவியாகவே கருதப்பட்டது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் மிகையில் கொர்பச்சேவ் இது பற்றி கட்சி மகாநாட்டில் வெளிப்படையாகப் பேசினார். ''அரசியல் அமைப்பின் மற்றுமோர் கருத்தாழமுள்ள குறைபாடு உருப்பெற்றது; அது, பொதுவாழ்வை மிகையதிகமாக அரசாங்கமயமாக்குவதாகும். சோஷலிஸத்தின் கீழ் அரசின் கடமைகளும் செயற்பாடுகளும் முதலாளித்துவத்தின் கீழ் அரசின் கடமைகள், செயற்பாடுகளைக் காட்டிலும் வீச்சில் அதிகம் பெரியவை. ஆனால் கண்டிப்பான நிர்வாகம் மற்றும் நிர்ப்பந்தத்தின் மீது சார்ந்துநிற்கும் அதிகாரத்தை வலுப்படுத்துவதன் மூலமாக அல்லாமல், யாவற்றுக்கும் மேலாய் ஜனநாயகக் காரணியின் பாத்திரத்தை அதிகரிப்பதன் மூலமும் நிர்வாகத்தில் பரந்த மக்கள் பகுதியினரைச் சம்பந்தப்படுத்துவதன் மூலமும் நிர்வாகக் கடமைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும்!

சோவியத் அரசியல் அமைப்பைச் சீர்திருத்துவதற்கான வேலைத்திட்டமே, இக்கடமையை நிறைவேற்றுவதற்கு உதவும் வண்ணம் மகாநாட்டினால் அங்கீகரிக்கப்பட்டது. இச்சீர்திருத்தத்தின் முதலாவது கட்டம், மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் அவர்களின் காங்கிரசைக் கூட்டுவதிலும் முடிவடைந்தது. அரசை, சமுதாயத்தை விஞ்சி நிற்கும் ஓர் உறுப்பு என்ற நிலையிலிருந்து, அதற்குக் கீழ்ப்பட்டதான ஓர் உறுப்பாக மாற்றுவதும், மக்களின் இறைமையை அதிகாரத்தின் ஓர் ஊற்றுக்கண்ணாக முறைப்படுத்துவதும் சீர்திருத்தத்தின் நோக்கமாகும். சட்டத்தினால் ஆளப்படும் அரசு என்ற பதத்தின் அடிநாதமாக விளங்கும் கருத்து மிகத் துல்லிதமாக இதுவே.

இச்சீர்திருத்தமானது சோஷலிஸ ராஜ்யத்துவத்துக்கும் மக்களின் சுய-அரசாங்கத்துக்கும் அடிநாதமாக விளங்கும் மக்கள் பிரதிநிதிகள் சோவியத்துக்களில் மெய்யான இறைமையை உறுதிசெய்தலைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கிறது. சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் இப்போது இது சம்பந்தமாய் மிகவும் முக்கியமான சட்டவாக்கங்களை வரைந்து வருகிறது. அவை, கட்சி உறுப்புக்களதும் அரசாங்க உறுப்புக்களதும் கடமைகளைத் தெளிவாக வரையறுப்பது, பகுதிகளது சர்வாம்சம் தழுவிய சமூக, பொருளாதார முன்னேற்றப் பிரச்னைகளைக் கையாள்வதில் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபைகளின் பரிபூரண சுதந்திரத்தை ஸ்தாபிப்பது, சகல நிறைவேற்று உறுப்புக்கள் மீதுமான சோவியத்துக்களது மெய்யான மேலாண்மையை நிலைநிறுத்துவது ஆகியனவற்றை அக்கறைப்படுத்துகிறது.



## புதிய சட்டங்கள்

அரசியல் சீர்திருத்தத்துக்காகக் கட்சி மகாநாட்டினால் வகுத்துரைக்கப்பட்ட வேலைத்திட்டம் படிப்படியாக ஓர் சட்டவாக்க வடிவத்தைப் பெற்றுவருகிறது. இப்பாதையிலான முதல் நடவடிக்கைகள் சோவியத் ஒன்றியத்தின் அரசியல் யாப்பில் சீர்திருத்தங்கள் மற்றும் பிற சேர்ப்புகள் பற்றிய சட்டங்களும் சோவியத் ஒன்றியத்தின் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதும் ஆகும். 1988ம் ஆண்டின் இறுதியில், நாடு தழுவிய விவாதங்களின் பின்னர் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம சோவியத்தினால் அவை அங்கீகரிக்கப்பட்டன. மக்கள் பிரதிநிதிகளின் தேர்தல், 1989 மே—ஜூனில் சோவியத் ஒன்றியத்தின் முதலாவது மக்கள் பிரதிநிதிகள் காங்கிரசைக் கூட்டியமை, அதன் பணி ஆகியனவே இத்திசையில் ஒரு பெரும் நடவடிக்கை. அரசியல் யாப்பு மேற்பார்வைக்கான குழு மற்றும் அரசியல் யாப்பு ஆணைக்குழு ஆகியன அமைக்கப்பட்டன.

பொது மக்களின் விரிவான பங்கேற்புடன் தற்போது மென்மேலும் அதிகமான சட்டங்கள் வரையப்பட்டன, வரையப்பட்டு வருகின்றன. உள்ளூர் சுய-ஆட்சி, ஒன்றியக் குடியரசுகள், கிளாஸ்த்னாஸ்த், பத்திரிகை, மனச்சாட்சிச் சுதந்திரம், இளைஞரின் உரிமைகள் போன்ற இன்னோரன்னவை பற்றியவை அவை. அவை, சட்டத்தினால் நேரடியாகக் குறிப்பிட்ட எதுவும் அனுமதிக்கப்படுகிறது என்ற முன்னைய கோட்பாட்டை அப்புறப்படுத்தி சட்டத்தினால் தடைசெய்யப்படாதது எதுவும் அனுமதிக்கப்படுகிறது என்ற கோட்பாட்டை முரணின்றி நடைமுறைப்படுத்துவதற்கு உதவும்.

ஒரே வார்த்தையில் சொன்னால், சட்டத்தின் சீர்திருத்தம், தீர்க்கப்படாத பல பிரச்னைகளின் முடிச்சுக்களை அவிழ்ப்பதற்குச் சமுதாயத்துக்கு உதவவென வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கைகள் யாவும் மக்களின் சட்டக் கல்வியில் பொதுவான அதிகரிப்புடன் இணைந்து வராவிட்டால் பயனற்றதாகவே இருந்துவிடும். இந்நோக்கத்துக்காக, நாடுமுழுவதிலுமுள்ள இலட்சோப லட்சம் மக்கள் தம்முடைய உரிமைகளை நடைமுறையில், கூடுதல் தகுதியுடன் நடைமுறைப்படுத்தும் வகையில் சட்டக் கல்வி அளிக்கும் இயக்கம் ஒன்றை ஒழுங்கு செய்வதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

★

கேள்வி—பதில்

# மக்கள் பிரதிநிதிகளின் காங்கிரஸுகள்

எமது வாசகர்கள் பலர் மக்கள் பிரதிநிதிகளின் காங்கிரஸ் பற்றி அதிகம் தெரிந்துகொள்ள விரும்புகின்றனர். ''கெம்யூனிஸ்ட் வூருசோனிக் ஸில'' சஞ்சிகையில் வெளியான இக்கட்டுரை இதை விளக்கிக்கூறுகிறது.

சமீப காலத்தின்போது, சோவியத் நாட்டின் அரசியல் சுயசரிதத்தில் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த இன்னுமோர் வரி சேர்க்கப்பட்டிருக்கிறது. மக்கள் பிரதிநிதிகள் காங்கிரசை உருவாக்குவது, அதன் செயற்பாடு பற்றியே நாம் இங்கு குறிப்பிடுகிறோம். 1988 ஜூன் மாதம் நடைபெற்ற 19வது அகில ஒன்றியக் கட்சி மகாநாட்டின் பரிந்துரைகளுக்கு இசைவாகவும், 1988 டிசம்பர் முதலாம் திகதியன்று சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தினது விசேட கூட்டத்தொடரில் அங்கீகரிக்கப்பட்ட சோவியத் ஒன்றியத்தின் அரசியல் யாப்பில் (அடிப்படைச் சட்டத்துக்கு) திருத்தங்கள், சேர்ப்புகள் செய்வது பற்றிய சோவியத் ஒன்றியத்தினது சட்டத்தின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டது. 1989 மார்ச் மாதம் நடைபெற்ற மக்கள் பிரதிநிதிகள் தேர்தலும் மக்கள் பிரதிநிதிகள் காங்கிரஸ் கூட்டப்பட்டமையும் —இவை யாவும் சோவியத் சமுதாயத்தினது அரசியல் அமைப்பில் தீர்க்கமான சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுவதன் முதலாவது கட்டத்தைக் குறித்தது,

சோவியத் ஒன்றியம் உருவாக்கப்பட்டது முதல், தொழிலாளர்கள், விவசாயிகள், செஞ்சேனை வீரர்களின் பிரதிநிதிகளது சோவியத்துக்களின் அகில ஒன்றிய காங்கிரஸுகள் ஓர் முறையான அடிப்படையில் நடைபெற்றன; அதேசமயம், இக்காங்கிரசுகளுக்கு இடையே சோவியத் ஒன்றியத்தின் மத்திய நிறைவேற்றுக் குழுவின் கூட்டத்தொடர்கள் நடைபெற்றன. இவை பரந்த, சுயாதீனமான வெகுஜனப் பேரவைகள்; சமுதாயத்தின் வாழ்வு, சோஷலிஸ நிர்மாணம் சம்பந்தப்பட்ட பெரும் பிரச்னைகளைக் கையாண்டன. அவை சோஷலிஸ ஜனநாயகம், அதன் அமைப்புகள், சோவியத் பாரம்பர்யங்கள் ஆகியவற்றுக்கான அடித்தளத்தை இட்டன.

1920ம் ஆண்டுகளிலும் 1930ம் ஆண்டுகளின் நடுப்பகுதி வரையிலும், நகர, குடியிருப்பு மற்றும் கிராம சோவியத்துக்களின் பிரதிநிதிகள் நேரடியான, வெளிப்படையான, சமத்துவமான வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். அதிகாரத்தின் அதியுயர்ப் பிரதிநிதித்துவ உறுப்புக்கள் சோவியத்துக்களின் பொருத்தமான காங்கிரசுகளில் இரண்டு—மற்றும் பல கட்டத் தேர்தல்கள் மூலம் தெரிவுசெய்யப்பட்டன. 1924ம் ஆண்டின் சோவியத் அரசியல் யாப்பினது 9வது விதியின்கீழ், சோவியத் ஒன்றியத்தின் சோவியத்துக்களது காங்கிரஸானது 25 ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் நகர சோவியத்துக்களதும் நகர்புறக் குடியிருப்புக்களது சோவியத்துக்களதும் பிரதிநிதிகளையும், 125 ஆயிரம் மக்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் கிராமப்புற சோவியத்துக்களின் பிரதிநிதிகளையும் கொண்டிருந்தது.

கிராமப்புறத்தில் சிறிய அளவிலான பண்ணைகள் பெருமளவில் காணப்பட்டமை (1920ம் ஆண்டுகளின்போது மக்களில் 80 சதவீதமானோர் கிராமப்புறத்திலேயே வாழ்ந்தனர்), தூக்கிவீசப்பட்ட சுரண்டல் வர்க்கங்கள் சோஷலிஸ நிர்மாணத்துக்குக் காட்டிய எதிர்ப்பு, கலாசார ரீதியில் நாடு பின்தங்கி இருந்தமை—ஆகிய இவை யாவும் வாக்குரிமை மீது தற்காலிக வரம்புகளை சோவியத் ஆட்சி விதிப்பதற்கு நிர்ப்பந்தித்தன. நடைமுறையில் சுரண்டல் வர்க்கங்களுக்கு வாக்களிக்கும் உரிமைமை மறுப்பதிலும், சோவியத்துக்களின் காங்கிரசுகளை உருவாக்குவதில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களின் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக 1:5 என்ற விகிதாசாரத்தை ஸ்தாபிப்பதிலும் இது தன்னைத் தானே வெளிப்படுத்தியது. ஸ்தூலமான வரலாற்று நிலைமையினால் நிர்ப்பந்திக்கப்பட்ட இந்த தற்காலிக வாக்குரிமை வரம்புகள் 1930ம் ஆண்டுகளின் நடுப்பகுதி வரையில் நீடித்திருந்தது.

சோவியத் ஒன்றியத்தின் மத்திய நிறைவேற்றுக் குழுவினால் சோவியத் ஒன்றியத்தினது சோவியத்துக்களின் முறையான காங்கிரஸுகள் கூட்டப்பட்டன; இவை நாட்டின் வாக்காளரது சமூக இயைபு மற்றும் அளவிலிருந்து முன்சென்று இட ஒதுக்கங்களை நிர்ணயம் செய்தது ஒன்றிய சோவியத் மற்றும் தேசிய இனங்கள் சோவியத்தின் கோரிக்கை பேரில் — இவை இரண்டும் சோவியத் ஒன்றியத்தின் மத்திய நிறைவேற்

றுக் குழுவின் சம அந்தஸ்துள்ள சபைகள் — இரண்டு ஒன்றியக் குடியரசுகளது கோரிக்கையின் பேரில் சோவியத்துக்களின் அகில—ஒன்றிய காங்கிரஸ் கூட்டப்படலாம்.

சோவியத் ஒன்றியம் உருவாக்கப்பட்டதன் பின்னர், சோவியத் ஒன்றியத்தின் சோவியத்துகளது எட்டு காங்கிரஸுகள் நடந்தேறியுள்ளன. சோவியத் ஒன்றியத்தின் 1924ம் ஆண்டின் அரசியல் யாப்பு விதி 11ன் படி, சோவியத் ஒன்றியத்தின் மத்திய நிறைவேற்றுக் குழுவினால் ஆண்டுக்கொரு தடவை முறையான காங்கிரசுகள் கூட்டப்படவிருந்தன. ஆயினும், 1930ம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரத்துவ முறையும், எதேச்சாதிகார ஆட்சி முறைகளும் ஸ்டாலினின் தனிநபர் வழிபாடும் ஆழவேரூன்றின, பெருமளவில் அடக்குமுறைகள் நிகழ்ந்தன, சட்டவிரோதச் செயல்கள் மலிந்து காணப்பட்டன. இதன் விளைவால் சோவியத்துக்களின் காங்கிரசுகளைக் கூட்டும் நடைமுறையும் துண்டிக்கப்பட்டது. 1936ம் ஆண்டில்தான் கடைசிக் காங்கிரஸ் நடைபெற்றது.

தற்போதைய மக்கள் பிரதிநிதிகளின் காங்கிரசும், அதன் உருவாக்கமும் செயல்பாடும்—சோவியத் யூனியனின் வாழ்வில் முதலாவது தஸாப்தங்களில் கூட்டப்பட்ட காங்கிரசுகளின் பாரம்பரியங்களைத் தொடர்கின்றன. காங்கிரசுக்கு 2.249 மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களில் 557 பிரதிநிதிகள் (24.8 சதவீதத்தினர்) தொழில் துறையிலும் நிர்மாணத்துறையிலும், போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்புகள் துறையிலும் 425 மக்கள் பிரதிநிதிகள் (18.9 சதவீதம்) விவசாயத்திலும் ஈடுபட்டுள்ளனர்; 616 மக்கள் பிரதிநிதிகள் (27.4 சதவீகத்தினர்) சிருஷ்டி மற்றும் விஞ்ஞான அறிவுத் துறையினரைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். 187 பிரதிநிதிகள் 30 வயதுக்குக் குறைந்தவர்கள். 352 பெண் பிரதிநிதிகள் உள்ளனர். சோவியத் ஆயுதப் படைகளை 80 பிரதிநிதிகள் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். சோவியத் நாட்டின் வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் பிரதிநிதிகளில் 7 மதத் தலைவர்களும் உள்ளடங்குகின்றனர்.

மக்கள் பிரதிநிதிகளின் காங்கிரஸ் சுப்ரீம் சோவியத்தின் தலைவரையும் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தையும்—இது ஒன்றிய சோவியத் மற்றும் தேசிய இனங்கள் சோவியத் ஆகிய இரு சமஅந்தஸ்துள்ள சபைகளைக் கொண்டது—தெரிவுசெய்தது. சுப்ரீம் சோவியத். மக்கள் பிரதிநிதிகள் மத்தியிலிருந்து கமிஷன்களையும் குழுக்களையும் உருவாக்கியது. அவை, சோவியத் ராஜ்யத்தின் உள்துறை, அயல்துறைக் கொள்கை சம்பந்தமான, குறிப்பாக தற்காப்பு, பாதுகாப்பு, தேசிய இனங்கள் கொள்கை, சர்வதேச உறவுகள், விவசாயக் கொள்கை, விஞ்ஞானம், கலாசாரம், கல்வி ஆகியப் பிரச்னைகளைக் கையாள்கின்றன.

★

**பேட்டி**

# சோவியத் பொருளாதாரத் திட்டங்களும் எதார்த்தங்களும்

**சோவியத் ராஜ்யத் திட்டமிடல் குழுவின் துணைத் தலைவர் லியனிட் விட் ''கொம்யூனிஸ்ட் வூருசோனிக் சில்'' சஞ்சிகைக்கு அளித்த பேட்டி இது.**

**எம்முடைய தேசியப் பொருளாதாரம் 1989ம் ஆண்டு முதல், புதிய பொருளாதாரப் பொறியமைவு பொருளாதாரம் முழுவதையும் பொருளுற்பத்தியின் எல்லாத் துறைகளையும் தழுவிய சூழ்நிலைகளில் வளர்ந்து வந்திருக்கிறது. திட்டமிடலில் காணப்படும் புதிய அம்சம் யாது?**

சோவியத் பொருளாதாரத்தின் எல்லா உற்பத்தித் துறைகளிலுமுள்ள தொழிலகங்களையும் முழுமையான பொருளாதார அடக்கச் செலவுக் கணக்கியல் மற்றும் சுய-நிதியீட்டின் கீழ் கொண்டுவந்ததும், பொருளாதார முகாமைத்துவத்தின் புதிய கூறுகளை நடைமுறையில் சீரமைத்ததும் நடைபெற்ற முதலாவது ஆண்டுதான் 1989. மேல்மட்டத்திலிருந்து விடுக்கப்பட்ட திட்டமிட்ட இலக்குகளின் வீச்சில் கணிசமான குறைப்புகள் மூலம் சிறப்படைந்த பொருளாதார முகாமையின் புதிய நிலைமைகளின் கீழ் பொருளாதாரச் செயற்பாட்டில் ஒட்டுமொத்த இடைச் செயற்பாட்டையும் ஸ்திர நிலையையும் சாதிப்பதில் இது மிகவும் முனைப்பான கட்டம். அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட கட்டளைகள் தீவிரமாகக் குறைக்கப்பட்டிருக்கின்றன. தொழிலகங்கள் உற்பத்தி வேலைத்திட்டத்தை வரைவதில் அவற்றின் சுயாதீனம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது; உற்பத்திச் சாதனங்களில் மொத்த வர்த்தகத்தின் வீச்சு விரிவடைந்திருக்கிறது.

1989ம் ஆண்டில், அரச மூலதன நிதியீடுகளில் அரைவாசி தொழிலகங்களது வருமானத்தைக் கொண்டே மேற்கொள்

ளப்பட்டன. தொழிலகங்கள் தம்முடைய பொருளாதாரச் செயற்பாட்டில் வழங்குநர்களுடனும் நுகர்வோருடனும் தொடர்புகளைச் சுயாதீனமாக ஸ்தாபித்துக் கொள்வதிலும், அவர்களுக்கிடையே நீண்டகால உறவுகளை வளர்ப்பதிலும் பொருளாதாரச் செயற்பாட்டின் மட்டத்தை அதிகரிப்பதிலும் அதிகரித்த அளவுக்குக் கவனம் செலுத்துகின்றன.

பொருளாதாரத்தினதும் பிராந்தியத்தின் சமூகத் துறையினதும் சர்வாம்ச வளர்ச்சியை உறுதி செய்வதில் ஒன்றிய மற்றும் சுயாட்சிக் குடியரசுகளது அமைச்சரவைகளுடையவும் உள்ளூர் மக்கள் பிரதிநிதிகள் சோவியத்துக்களுடையவும் அதிகாரங்களைக் கணிசமாக அதிகரிக்கும் திசையில் இதுவரை முதல் நடவடிக்கை மாத்திரமே எடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்றியக் குடியரசுகள், உரிய பிரதேசங்களில் அமைந்திருக்கும் எல்லாத் தொழிலகங்களதும் (இணையங்கள்) ஸ்தாபனங்களதும் நலன்களை, அவை எந்தத் திணைக்களத்துக்குக் கீழ் வருகின்றன என்ற பேதமில்லாமல், தக்க முறையில் கணக்கில் எடுப்பதுடன் தம்முடைய ஒருங்கிணைந்த திட்டங்களைச் சுதந்திரமாகத் தாமே வரைவதுதான் ஒன்றியக் குடியரசுகளது பொருளாதார, சமூக வளர்ச்சியின் அடிப்படையான திட்டமிடல் வடிவம் என்பது நிரூபித்துள்ளது.

சோவியத் யூனியனில் கூட்டுறவுச் சட்டத்தின் அறிமுகம், கூட்டுறவு மற்றும் சொத்துடைமை, குத்தகை போன்று சொத்துடைமையின் கலப்பு வடிவங்களை அடிப்படையாகக் கொண்ட சமூக உற்பத்தியைச் செயல்படச் செய்கிறது. பொருளாதார நிர்வாகத்தின் அமைப்பு முழுவதையும் ஜனநாயகமயமாக்குவதன் அடிப்படையில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கூட்டுறவு மற்றும் அரசாங்கத்தால் நடத்தப்படும் ஸ்தாபனங்களுக்கு இடையேயும், கூட்டுறவுகளுக்கும் அரசுக்கும் இடையேயும் ஆன திட்டமிட்ட உறவுகளை மாற்றியமைப்பதை இப்போக்கு செயலூக்கமுடன் ஆரம்பித்திருக்கிறது.

**விஞ்ஞான, தொழில்நுட்பவியல் முன்னேற்றத்தை விரைவுபடுத்தவும் உலகச் சந்தையில் எம்முடைய உற்பத்திப் பொருட்களைச் செயலூக்கமுடன் போட்டியிடச் செய்யவும் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன?**

செல்வாதாரங்களைச் சேமிப்பதற்கும் உற்பத்தி ஆற்றலை அதிகரிப்பதற்கும் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துவதற்கும் உதவும் பாரிய காரணி இது என்பது வாஸ்தவமே. ஆயினும், இப்பிரச்னைக்கு இடையறாத கவனம் செலுத்திய போதிலும்கூட, இக்காரணி இன்னமும் போதியளவுக்குப் பயன்படுத்தப்படவில்லை. பொருளாதார நிர்வாக அமைப்பைச் சீர்ப்படுத்துவது, முழுமையான அடக்கச் செலவுக் கணக்கியல் மற்றும் மற்றும் சுய-நிதியீட்டுக்கும் புதிய பொருளாதார உறவுகளின் வடிவங்களுக்கும் மாறிச் செல்வது, குத்தகை உடன்படிக்கைகள் மற்றும் பிற நடவடிக்கைகளை எடுப்பது—ஆகிய இவை யாவும் விஞ்ஞான, தொழில்நுட்பவியல் முன்னேற்றத்தின் சாதனைகளைத் துரிதமாகப் பிரயோகிப்பதில் உற்பத்தித் துறை கருத்தாழமுள்ள ஆர்வங்கொள்வதற்கு ஸ்தூலமான நிலைமைகளை உருவாக்குகின்றன.



சோவியத் யூனியனின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்கான அரசாங்கத் திட்டம், அரச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் வேலைத் திட்டங்களுடன் தொடர்புடைய விஞ்ஞான—தொழில் நுட்பவியல் பிரச்னைகளை வகுப்பதற்கும் விஞ்ஞான-ஆராய்ச்சி மற்றும் புனைவரைவு ஸ்தாபனங்களது பரிசோதனைத் தளத்தின் வளர்ச்சிக்கும் அன ஸ்தூலமான கடமைகளை வகுத்துரைக்கிறது. அவை, இப்பெரும் தேசிய பொருளாதாரப் பிரச்னைகளில் சிறிய விகிதாசாரத்தையே சம்பந்தப்படுத்துகிறது. உற்பத்தி, விஞ்ஞானம், தொழில்நுட்பவியலின் வளர்ச்சிக்காக நிதி ஏற்படுத்தப்பட்டிருக்கும் பொருளாதார நிர்வாகத்தின் புதிய நிலைமைகள் காணப்படும் தொழிலகங்களில் இத்துறையிலான முக்கியமான பணி குவிந்திருக்கிறது. அவை இந்த நிதிக்காகத் தமது சொந்தப்பணத்தைச் செலுத்துகின்றன, புதிய அடிப்படையில் தொழில்நுட்ப மறுசாதனப்படுத்துவதற்காக அதை சுதந்திரமாகப் பயன்படுத்துகின்றன.

இயந்திரவியல் தொகுப்பில் தாரீதியான மாற்றங்கள் திட்டமிடப்படுகின்றன. 1988ம் ஆண்டைக் காட்டிலும் பெருமளவுக்கு உற்பத்தி புதுமைப்படுத்தப்படும். இத்தொகுப்பில் அதன் பங்கு 10 8 சதவீதத்துக்கு அதிகரிக்கப்படும். ஒட்டுமொத்தத்தில், 1986-1989ம் ஆண்டுகளின்போது இயந்திரவியல் உற்பத்தியின் வளர்ச்சி, தொழில்துறையைக் காட்டிலும் 1.5 தடவைகள் அதிகமானதாக இருக்கும்.

19வது அகில ஒன்றியக் கட்சி மகாநாட்டுத் தீர்மானங்களின்கீழ் சோவியத் பொருளாதாரத்தின் சமூகத் திசைவழி மேம்படுத்தப்படும். ஆயினும் இருந்துவரும் உள்ளாற்றல்கள் பாவனைப் பொருட்களைப் போதுமான அளவுகளில் உற்பத்தி செய்வதை உறுதி செய்வதற்குப் போதுமானவையல்ல. சமூக வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள தொழில்துறைகளுக்கு உந்துசக்தியளிக்கவும் பொருளாதார ஆதரவை வகை செய்யவும் எத்தகைய ஸ்தூலமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

உண்மையிலேயே, வெளிப்படையாகச் சொன்னால், நுகர்வுப் பொருட்களின் சந்தையில் நிலைமை சிறப்பானதாக இல்லை. எனவே, சோவியத் அமைச்சரவையும் சோவியத் ராஜ்யத் திட்டமிடல் குழுவும் நிலைமையைச் சீர்படுத்துவதற்குத் தற்போது பெரும் முயற்சிகளைச் செய்துவருகின்றன. 1989ம் ஆண்டின் இறுதியளவில் தற்போது நுகர்வுக்காகவும் உற்பத்தியல்லாத நிர்மாணத்துக்காகவும் ஆற்றுப்படுத்தப்படும் செல்வாதாரங்களை 5.4 சதவீதத்தால் அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்

டிருக்கிறது. நுகர்வுப் பொருட்களின் தொழில்துறை உற்பத்தி 7 சதவீதத்தால் அதிகரிக்கவுள்ளது. சில்லறை வர்த்தகத்திலும் அரசு மற்றும் கூட்டுறவு வர்த்தகத்திலும் 6 பில்லியன் ரூபிள்கள் பெறுமதியான அதிகரிப்பு இருக்கும்.

சில்லறை விலைகளுக்கான மென் தொழில் பொருட்களின் உற்பத்தி இவ்வாண்டின் இறுதியில் 2 3 பில்லியன் ரூபிள்களால் அதிகரிக்கும் கலாசார அன்றாட மற்றும் வீட்டுப்பாவனைப் பொருட்களைப் பொறுத்தவரையில் 1988ம் ஆண்டுத் திட்டத்துடன் ஒப்பிடுகையில் அவற்றின் உற்பத்தி பின்வருமாறு அதிகரிக்கும்: வர்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் 10 சதவீதம், வீடியோ-டெக் 70 சதவீதம், தளவாடம் 7 சதவீதம்.

அன்றாட சேவைகள், குறிப்பாகக் கிராமப்புறத்தில், விரைவான வேகத்தில் வளர்ச்சியடைகின்றன. இது, வீட்டுப் பாவனைப் பொருட்கள், வானொலி — இயந்திரவியல் சாதனம், மோட்டார் வாகனங்கள், தளவாடம் ஆகியவற்றின் பழுதுபார்ப்பு மற்றும் சீர்ப்படுத்தலை அக்கறைப்படுத்துகிறது. கூட்டுறவு ஸ்தாபனங்களும் சுய-தொழிலில் ஈடுபடும் பிரஜைகளும் சந்தையை நிரப்புவதிலும் மக்களுக்குச் சிறப்பான சேவைகளை வழங்குவதிலும் பெரும் பாத்திரத்தை வகிக்க வேண்டியுள்ளது. வளர்ச்சிச் சிரமங்களும் முரண்பாடான மதிப்பீடுகளும் இருந்தபோதிலும் கூட, இத்திசை போதியளவு வாய்ப்பு தருவது.

ஆயுதப் படைகளின் குறைப்பும் நியாயமான அளவுக்குப் போதிய மட்டங்களுக்குள் நாட்டின் தற்காப்பு ஆற்றலை உறுதி செய்யும் திசையில கட்சியும் அரசும் முடுக்கி விட்டுள்ள போக்கும் சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரங்களை மேலும் உயர்த்துவதற்குப் பங்களிக்கும் பொருளாதாரத் துறைகளின் வளர்ச்சிக்கான செல்வாதாரங்களை விடுவிப்பதற்கு உதவும்.

உண்மையில், இது மிகவும் ஆர்வந்தருகிற, முக்கியமான, சிக்கலான பிரச்னையாகும். இராணுவத் துறையிலிருந்து சிவிலியன் உற்பத்தித்துறைக்கு மாறிச் செல்வது, பணியின் வெவ்வேறு கட்டங்களைச் சம்பந்தப்படுத்துகிறது தற்சமயம் தற்காப்புத் தொழில் துறைகளாக இருப்பவை, சிவிலியன் இலத்திரனியல், நவநவீன மருத்துவசாதனம் மற்றும் கருவி நிர்மாணத்தின் வளர்ச்சியில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கும்.

★



பேராசிரியர் எம், மொனின்
டி.எஸ்ஸி (வரலாறு)

# சோஷலிஸ உலகம்

சோஷலிஸ உலகம் நவீன நாகரிகத்தின் பகுதி. அது, பல மக்களின் ஒரு பொதுவான கதிப்போக்காக மாறியிருக்கிறது.

அதேசமயம், ஒரு புதிய சமூக அமைப்பின் ஸ்தாபிதம் மற்றும் வளர்ச்சியின் போக்கு அவ்வளவு சுலபமானதல்ல. சோஷலிஸ நாடுகள் தம்முடைய வளர்ச்சிக் காலம் முழுவதிலும் எண்ணற்ற பல சிரமங்களுக்கு முகங்கொடுத்தன, தவறுகளைத் தவிர்த்துக் கொள்ளவில்லை. அவை தொழில்நுட்பத் துறையில் ஏகாதிபத்திய நாடுகளைக் காட்டிலும் பின்தங்கிய நிலைமையில் இருப்பதற்கான காரணத்தை இது பெருமளவுக்கு விளக்குகிறது. ஆனால், சோஷலிஸ நாடுகளில் தற்போது நிகழ்ந்துவரும் மறுசீரமைப்பு அவற்றின் சமூக, பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கு உதவும்.

## முன்னோடிகளின் பாதை

ஓர் சமூக, சமூக—பொருளாதார அமைப்பு என்ற வகையில் சோஷலிஸத்தை ருஷ்யாவில் 1917ம் ஆண்டு நடைபெற்ற மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் வெற்றியே தொடக்கி வைத்தது. இரண்டாம் உலகப் போரும் (1939—1945), கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஐரோப்பிய, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகள் பலவற்

றில் சோஷலிஸப் புரட்சிகளும் நடைபெற்றதன் பின்னர், அது ஓர் உலக அமைப்பாக வளர்ச்சியுற்றது. தற்போது, அல்போனியா, பல்கேரியா, சீனா, கியூபா, செக்கோஸ்லேவேக்கியா, கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, ஹங்கேரி, லாவோஸ், மங்கோலியா, போலந்து, ருமேனியா, சோவியத் யூனியன், யூகோஸ்லேவியா ஆகிய 15 நாடுகளை அது உள்ளடக்கியுள்ளது.

புதிய சமுதாயத்தை நிர்மாணிக்க ஆரம்பித்த நாடுகள், அவற்றின் பொருளாதார, சமூக வளர்ச்சி மட்டத்தைப் பொறுத்த வரையில் (செக்கோஸ்லேவேக்கியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு தவிர) அதிக வளர்ச்சியை அடைந்திருக்கவில்லை. இது, புரட்சியின் வெற்றிக்குப் பின்னர் அவற்றினுடைய முன்னேற்றத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தவே செய்தது.

தவிரவும், சோஷலிஸ நாடுகள் அனைத்தும் ஆரம்ப நாட்களிலிருந்தே பெரும் சிரமங்களை அனுபவித்தன; ஏனெனில், இரண்டாம் உலகப் போரின் ஆண்டுகளில் நாஜிக்களும் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களும் அவற்றின் மீது பெரும் அழிவுகளையும் நட்டங்களையும் திணித்தனர், அதே சமயம், கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசும், வியத்நாம் சோஷலிஸக் குடியரசும், லாவோ மக்கள் ஜனநாயகக் குடியரசும் கொரியாவிலும் (1950—1953) இந்தோ சீனாவிலும் (1964—1975) நடைபெற்ற போர்களின் போது அமெரிக்க ஆக்கிரமிப்பு காரணமாக பெரும் இழப்புகளைப் பெற்றன.

சோஷலிஸ நாடுகள் யாவற்றிலும் ஓர் வளர்ச்சியடைந்த சமூக, அரச அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது, மனிதனை மனிதன் சுரண்டுவது ஒழித்துக்கட்டப்பட்டது, பொருளாதார மற்றும் கலாசார வளர்ச்சியில் ஓர் சிறப்பான தொடக்கம் மேற்கொள்ளப்பட்டது என்ற உண்மையே அவற்றை ஐக்கியப்படுத்திற்று. இவ்விதம், பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சிலில் உறுப்பினர்களாகவுள்ள சோஷலிஸ நாடுகள், அவற்றின் பொருளாதார வளர்ச்சி வீதங்களைப் பொறுத்த வரையில், ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் உறுப்பினர்களாகவுள்ள மேற்கு ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் விஞ்சி நிற்கின்றன.

உலகப் பிரதேசத்தில் 19 சதவீதத்தையும் உலக மக்கள் தொகையில் பத்தில் ஒன்றையும் கொண்டுள்ள பத்து சிஎம்இஏ நாடுகள் உலகின் தேசிய வருமானத்தில் கால்வாசியையும் விவசாய உற்பத்தியில் ஐந்திலொரு பங்கையும் உலகின் தொழில்துறை உற்பத்தியில் மூன்றிலொரு பங்கையும் வகை செய்கின்றன. 1950 முதல் 1980ம் ஆண்டுகளின் நடுப்பகுதி வரையில், அவற்றின் மொத்தத் தேசிய உற்பத்தி 9.4 தடவைகளும், தொழில்துறை உற்பத்தி 15 தடவைகளும் விவசாய உற்பத்தி 2.6 தடவைகளுக்கு அதிகமாகவும் வளர்ந்தன. அதே ஆண்டுகளின்போது, ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகளின் தேசிய வருமானம் 3.5 தடவைகளும், தொழில்துறை உற்பத்தி 3.7 தடவைகளும் விவசாய உற்பத்தி இரண்டு மடங்குக்கு அதிகமாகவும் வளர்ந்தன.



உலக சோஷலிஸ அமைப்பின் பொருளாதார, அரசியல் வளர்ச்சியின் இயக்காற்றல், உலகினதும் சமூக முன்னேற்றத்தினதும் கதிப்போக்குகளில் முனைப்பாகச் செல்வாக்கு செலுத்துகிறது. இந்த இயக்காற்றல் சோஷலிஸ நாடுகளின் மக்களது பொருளாயதத் தேவைகளிலிருந்தும் ஏகாதிபத்தியப் பிற்போக்குச் சக்திகளிடமிருந்து வரும் இராணுவ அச்சுறுத்தலை எதிர்க்கும் அவசியத்திலிருந்தும் முகிழ்கிறது. ஏனைய மக்களினங்களுக்கும், குறிப்பாக தம்முடைய சமூக—பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கான மார்க்கங்களைத் தேடும் வளர்முக நாடுகளுக்கும் முன்னுதாரணமாக அது விளங்குகிறது.

## முரண்பாடுகளும் சிரமங்களும்

சோஷலிஸம் தற்காலங்களிலும் கூட தொடர்ந்து முன்னேறுகிறது. சோவியத் யூனியனிலும் ஏனைய சோஷலிஸ நாடுகளிலும் நிகழ்ந்துவரும் புத்தாக்க மற்றும் பெரஸ்த்ரொய்கா போக்குகள்; அந்நாடுகள் எதிரிடும் மிகவும் சிரமமான கடமைகள் உள்ளிட, எந்தவொரு கடமையும் சாதிக்கப்படும் என்பதைக் காட்டுகின்றன. சாதாரணமாக, உள்ளாற்றலை இரட்டிப்பாக்காமல் அவற்றைப் பல்கிப்பெருகச் செய்வதும் எமது பொதுவான முன்னேற்றத்துக்கு ஓர் உந்து சக்தியாகப் பணிபுரிவதுமான வீறார்ந்த இடைச் செயற்பாடு, இதற்கு ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்தது.

இன்று சிஎம்இஏ உண்மையிலேயே புரட்சிகரமான கடமையைத் தனக்குத்தானே முன்வைத்துக் கொண்டுள்ளது. இரண்டாயிரமாவது ஆண்டளவில், சமூக உழைப்பு உற்பத்தித் தன்மையை ஆகக் குறைந்தது இரண்டு மடங்காக்கவும், தேசிய வருமானத்தின் கூறு ஒன்றுக்கான விசை மற்றும் மூலப் பொருள் நுகர்வைக் கூர்மையாகக் குறைப்பதற்குமான கடமையே இது. புதிய பொருட்களின் உற்பத்திக்காக ஆயத்தம் செய்வதற்காகச் செலவிடப்படும் நேரத்தை 40 சதவீதத்தால் குறைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 1990ம் ஆண்டளவில், சோஷலிஸ நாடுகளது தேசிய பொருளாதாரத்தில் சுமார் 200,000 தொழில்துறை ரபோத்துக்களைப் பெறுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

ஆயினும், மேற்கூறப்பட்டவை, உலக சோஷலிஸம் முரண்பாடுகளும் எதிர்விளைவுகளும் இல்லாமல் வளர்ந்து வருகிறது என்பதைப் பொருள்படுத்தவில்லை. சோஷலிஸ நாடுகளது மக்களின் வாழ்க்கைத் தரங்களில் உயர்வு, முக்கியமான முதலாளித்துவ நாடுகளது தரத்துக்கு ஏற்ற தொழில்துறைப் பொருட்களையும் விவசாயப் பொருட்களை

யும் சிஎம்இஏ நாடுகளது பண்டங்களின் சந்தையில் அதிகரிப்பது போன்ற தா தப்படுத்தப்பட முடியாத தீர்வுகளைக் காணவேண்டிய பல பிரச்னைகளை அது இன்னமும் எதிரிடுகிறது; கல்வி அமைப்பை மேம்படுத்துவது, சுகாதார சேவைகளின் தரத்தை உயர்த்துவது அழுத்துகின்ற புவியமைவியல் பிரச்னை போன்றவற்றுக்குத் தீர்வு காண்பது ஆகியனவும் இதில் அடங்கும். இதற்கு பொருளாதார, சமூகத் துறைகளை ஆழமாக மறுசீரமைப்பதும், அரசியல் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதும் சோஷலிஸ நாடுகளின் முன்னேற்றத்துக்கு இடையூருகவுள்ள அனைத்திலிருந்தும் அவற்றை விடுவிப்பதும் அவசியம்.

இந்தப் பிரச்னைகளையும் சிரமங்களையும் ஏற்படுத்தியவை யாவை?

சர்வதேச ஏகாதிபத்தியம் கட்டவிழ்த்துவிட்ட கெடுபிடிப் போரும் உலக நியூக்லியர்—ஏவுகணை யுத்த அச்சுறுத்தல் தொடர்ந்து அதிகரித்து வருவதும் வர்த்தகத்தில் பாரபட்சமும் சோஷலிஸ நாடுகள் பொருளாதாரத் துறையிலிருந்து பந்தோபஸ்துத் துறைக்குக் கணிசமான செல்வாதாரங்களை ஆற்றுப்படுத்த நிர்ப்பந்தித்தன.

இரண்டாவதாக, ஹங்கேரியிலும் (1956) செக்கோஸ்லேவேக்கியாவிலும் (1968) போலந்திலும் (1980ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில்) நடைபெற்ற சம்பவங்கள் போன்ற அத்தகைய நெருக்கடிப் புலப்பாட்டில் வெளிப்பாடு பெற்ற உள்நாட்டு வளர்ச்சியின் முரண்பாடான இயல்பு இந்நாடுகளுக்கும் சோஷலிஸ உலகம் முழுவதினதும் பொருளாதார, சமூக முன்னேற்றத்தையும் எதிர்மறையாகப் பாதிக்காமல் இருக்க முடியாது.

மூன்ருவதாக, அரசியல், பொருளாதாரத் துறைகளில் அவற்றின் ஆளும் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளது தவருன கணிப்புகளும் பிழைகளும் சோஷலிஸ நாடுகள் பலவற்றினது சமூக வாழ்வுத் துறையின் வளர்ச்சி மீது எதிர்மறையான தாக்கத்தைக் கொண்டிருந்தன. நிர்வாகக் கட்டளை பிறப்பிக்கும் மற்றும் உந்துதல் அளிக்கும் பொருளாதார நிர்வாக முறைகள் திணிக்கப்பட்டமை, அவற்றின் பொருளாதாரங்களை உள்ளியல்பான வளர்ச்சிக்கு மாற்றுவதில் ஏற்பட்ட தாமதம், பொருளாதாரப் பொறியுமைவு போன்றவற்றின் ஒரு முக்கியமான பகுதி என்ற வகையில் சந்தையைப் புல ஆண்டுகளாக உதாசீனம் செய்தமை ஆகியன பற்றி விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.



இக்காரணிகளின் ஒட்டுமொத்தமும் தேக்க நிலைக்கும் சோஷலிஸ நாடுகள் பலவற்றில் பொருளாதார வளர்ச்சி தடைபடுவதற்கும் இட்டுச் சென்றன. இதன் விளைவால் விஞ்ஞான, தொழில்நுட்பத் துறையில் தொழில்மயமான முதலாளித்துவ நாடுகளைக் காட்டிலும் அவை அதிகம் பின்தங்கின. மக்களின் வாழ்க்கைத் தரங்கள் குறையத் தொடங்கின, தத்துவவியல் மற்றும் தார்மீகப் பெறுமானங்கள் உருக்குலைக்கப்பட்டன. உண்மையில், நெருக்கடிக்கு முன்பதான நிலைமை 1980ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் உருப்பெற்றது; சோஷலிஸம் தனது முன்னணிப் பாத்திரத்தை இழக்கும் ஆபத்தும் தோன்றியது.

தற்போது மார்க்ஸிய-லெனினியப் போதனையினுலும் புதிய அரசியல் சிந்தனையினுலும் வழிகாட்டப்படும் சோவிபத் யூனியனும் இதர சோஷலிஸ நாடுகளும் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சிகளும் பொருளாதார, சமூக அல்லது வாழ்வின் இதர துறைகளில் தனது பயனற்ற தன்மையை நிரூபிப்பதற்குத் தவறியுள்ளவையும் வழக்கொழிந்தவையுமான சகலதையும் புதிய சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கான தம்முடைய கேந்திரவியல் மற்றும் நடைமுறையிலிருந்து விட்டொழிப்பதற்குத் துவங்கியுள்ளன. சோஷலிஸம் பற்றிய லெனினியப் பெறுமானங்களை மீளமைப்பதற்கும் சோஷலிஸத்தின் பின்விளைவுகளை முழுமையாகவே வேருடன் களைவதற்குமான போராட்டம் இப்போது நடைபெற்று வருகிறது. ஆளும் கட்சியின் கூட்டான, ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சிகள், மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரது போதனைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சோஷலிஸம் பற்றிய நவீன கருத்தமைப்பை வகுக்கும் நோக்குடையவை.

''கம்யூனிஸ்ட் வூருசென்யே சில்''
சஞ்சிகையிலிருந்து

★

ஓ. ராக்கோவ்ஸ்காயா
பொருளியலாளர்

# பொருளாயத நலவாழ்வும் இளைஞரும்

**இளைஞரின் பொருளாயத நலவாழ்வு பற்றி இருந்திருந்து எப்போதாவது எழுதப்பட்டும் பேசப்பட்டும் வந்தது. சோவியத் இளைஞரைப் பொறுத்தவரையில் பொருளாயத நலவாழ்வு முககியத்துவம் வாய்ந்ததல்ல. ஆனால், தேசபக்தியும் நாட்டின் பயனுக்காகப் பாடுபடுவதுமே முக்கியமான விஷயம் என்ற பழம் நம்பிக்கையே இருந்தது. சமுதாயத்தின் புத்தாக்கத்தில் ஈடுபடும் சோவியத் இளம் மக்களின் தேசபக்தியும் இன்னும் பிறவும் அதிகரித்துள்ளன. எனினும் அவர்களின் பொருளாயத நலவாழ்வைப் பொறுத்தவரையில் விஷயங்கள் எவ்வாறு உள்ளன?**

பல ஆண்டுகளாக நாட்டின் தேசியப் பொருளாதாரம் விரிவான அபிவிருத்திக்கும் தேர்ச்சியில்லாத, திறனில்லாத உழைப்பினைப் பயன்படுத்துவதற்கும் முடுக்கிவிடப்பட்டிருந்தது. இளம் மக்களே இங்கு முதலாய செல்வாதாரம். இளம் மக்கள் சாதக மற்ற கால நிலைமையுடைய புறப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் தொலைதூரத்திலுள்ள நிர்மாணத் திட்டங்களில் பணிபுரிவதற்கும் திரட்டப்பட்டனர். மேலும், நிர்மாணம் போன்றவற்றில் பொருளாதாரத்தில் தவறான கணிப்புகளை ஈடுசெய்யும் பொருட்டு, உருவாக்கப்பட்ட குறைந்த சம்பள மற்றும் இலவச வேலைகளில் அவர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

ஓர் அச்சுப்படிவ முறை படிப்படியாக உருவாகியது; இதன்படி தேசியப் பொருளாதாரத்தில் பணிபுரியும் இளம் மக்கள் ஓர் மலிவான ''செல்வாதாரமாகவே'' பெருமளவுக்கு நோக்கப்படுகின்றனர்.

1970 ம் ஆண்டுகளில் உழைக்கும் இளம் மக்களின் துறைவாரியான பிளவு பின்வரும் போக்குகளைச் சுட்டிக் காட்டிற்று. தொழில்துறை, போக்குவரத்து, நிர்மாணத் துறையில் தொழில்புரிந்த இளம் தொழிலாளர்களின் பங்கு மிகவும் அதிகம். கடுமையான உழைப்பு நிலைமைகளால் வேறுபடுத்திக்காட்டப்பட்ட பகுதிகளில் அவர்கள் வேலை செய்வது ஒரு விதியாக இருந்தது.

இளம் பெண்கள் உற்பத்தியல்லாத துறைகளில் பெருமளவில் ஈடுபட்டனர்—வர்த்தகம், பொது உணவு வசதி, அன்றாட சேவை வசதிகள், தொலைத் தொடர்புகள் போன்றவையே இவை. இந்தத் தொழில்கள் ஆக்கத் தன்மை போதியளவுக்கு இல்லாதவை, சலிப்பூட்டக் கூடியவை, குறைந்த சம்பளத்திற்கானவை.

1980ம் ஆண்டுகளில், முன்னைய பத்தாண்டுகளுடன் ஒப்பிடுகையில், கலாசாரம், விஞ்ஞானம், கலை ஆகிய துறைகளில் இளைஞர்கள் தொழில் பெறுவது கணிசமான அளவுக்குக் குறைந்திருந்தது. மேலும், வர்த்தகம், பொது உணவு வசதி, போக்குவரத்து, முகாமைத்துவ உறுப்புக்களில் அவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. கல்லூரி மட்டத்திலான பயிற்சியை அவசியப்படுத்தும் சில தொழில்களின் கௌரவமும் (விஞ்ஞானிகள், ஆசிரியர், இயந்திரவியலாளர், மருத்துவர் ஆகியோர்) குறைந்தது, இதன் விளைவால், இளம் மக்களின் கணிசமான விகிதாசாரத்தினர் முகங்கொடுக்கும் சமூக—பொருளாதாரப் பிரச்னைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு முனைப்பானதாகியது. பின்வரும் சித்திரத்தைப் பிரதிபலிக்கும் விகிதாசாரமின்மைகள் காரணமாக, இந்நிலைமை படிப்படியாக விருத்தியடைந்தது; தேர்ச்சியற்றதான உழைப்பில் ஏற்பட்டுள்ள குறைவை நிரப்புவதற்கு இளம் மக்கள் அதிகம் தயங்குகின்றனர். பதிலாக, கௌரவமான, ஆர்வந்தரும் தொழில்களிலேயே கூடுதல் ஆர்வங் காட்டுகின்றனர். மறுபுறத்தில், கூடிய சம்பளம், சிறப்பான வீட்டு வசதி, புதிய பாணி உடை ஆகியவற்றின் பால் பெருமளவுக்கு ஈர்க்கப்பட்டுள்ளனர்—இதுதான், '‚பொருளாயத நலவாழ்வு'' என்ற சொல்லின் பின்னால் நிற்கிறது.

இத்துறையில் தற்போதைய மெய்யான விவகாரங்களின் நிலையென்ன?

சமூகவியலாளர்களின் கூற்றுப்படி, 18-29 வயதுடைய

தொழிலாளர்கள், அலுவலக் ஊழியர்களின் சம்பளம் மாதம் 134 ரூபிள்கள்; அதேசமயம், தேசியப் பொருளாதாரம் முழுமைக்கும் 196 ரூபிள்கள். இளம் தொழிலாளர்களின் சராசரி சம்பளம், அலுவலக ஊழியர்களைக் காட்டிலும் 15 ரூபிள்கள் அதிகம். தொழிலாளர்கள் வெகுவிரைவில் ஒப்பீட்டளவிலே கூடுதல் சம்பளத்தைப் பெறுகின்றனர். பொருளாயத உற்பத்தியின் முதன்மையான துறைகளில் தொழில் புரியும் இளம் தொழிலாளர்களுக்கே இது பொருந்தும். ஆனால், இந்த ''உச்ச வரம்பை''யும் வெகுவிரைவிலேயே எட்டிவிட்ட அவர்களுக்கு மேலும் பதவி உயர்வுகளுக்கு வாய்ப்பில்லை.

இளம் பெண் தொழிலாளர்கள் பெரும்பாலும் குறைந்த சம்பள வகையில் அதிகமாகவுள்ளனர்: இளம் ஆண் தொழிலாளர்கள் கூடிய சம்பள வகையில் அதிகமாகவுள்ளனர். 18-29 வயதையுடைய பெண்களின் சராசரி மாதச் சம்பளம் 120.6 ரூபிள்கள். இது, தேசியப் பொருளாதாரத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து பெண்களதும் சராசரி சம்பளத்தைவிட 30 ரூபிள்கள் குறைவானது.

ஆரம்பத்தில் ஓர் இளம் தொழிலாளி சுமார் 120 ரூபிள்களைப் பெறுகிறார். அனுபவமும் தேர்ச்சியும் போதியளவு இல்லாமையாலும் ஆரம்பக் கட்டத்து விவகாரங்களைத் தற்காலிகமானதாகக் கருத முடியும். ஆனால், எமது மதிப்பீடுகளின்படி, ஒருவர் மாதம் 140 ரூபிள்கள் மட்டத்தை எட்டும்போது 26-29 வயதுடையவராகிவிடுகிறார்; எனவே, பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் அல்லது பொருளாயத நலவாழ்வுக் கண்ணோட்டத்திலிருந்து இந்த நிலைமையை மாமூலானது என்று கூற முடியாது.

குறைந்த தொடக்கநிலை சம்பள மட்டமும் அவற்றை உயர்த்துவதற்கான உள்ளாற்றலின்மையும்—இவை யாவும், பெரும்பான்மையான இளம் மக்கள் 30 வயதை அடையும் முன்பே சராசரியாக நான்கு தடவைகள் தமது வேலைத் தளங்களை மாற்றுவது ஏன் என்பதை விளக்குகிறது.

இளம் குடும்பங்கள் பலவும் பொருளாயத சிரமங்களை அனுபவிக்கின்றன. இளம் குடும்பங்களில் சுமார் 50 சதவீதமானவையின் நபர்வீத மாத வருமானம் சுமார் 100 ரூபிள்கள்; 14.6 சதவீதமானோரின் வருமானம் 150 ரூபிள்களும் அதற்கு அதிகமுமாகும். 1986ல் மக்கள் அனைவருக்குமான சராசரி புள்ளிவிபரம் முறையே 65, 31 சதவீதமாகும்.

இளம் குடும்பங்களது வருமானத்தில் பெற்றோர் வழங்கும் பொருளாயத உதவி கணிசமான பங்காகும்; இது நபர் வீதமாய் சராசரி 33 சதவீதம் அல்லது 35 ரூபிள்கள் ஆகும்.

மணம் முடிந்து ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்யாத இளம் தம்பதியரே பொருளாயத ரீதியில் துணையற்றவர்கள். குடும்ப வரவு-செலவில் 50 சதவீதத்துக்கும் அதிகமானவற்றுக்கு அவர்கள் பெற்றோரின் உதவியையே எதிர்பார்த்திருக்கின்றனர்.

முதலில் குறைவான சம்பளமும், சார்புநிலையின் விரிவான வளர்ச்சியுமே பழம் தலைமுறையிடமிருந்து பொருளாயத ரீதியிலும் தார்மீக ரீதியிலும் சார்ந்திருப்பதை ஒருவர் ஏற்றுக்கொள்ளச் செய்கின்றன. இதன் விளைவால் உண்மையிலேயே முரண்நகையான நிலைமை உருவாகிறது: இளம் மக்கள் முதியோரிடமிருந்து வரும் நாணய உதவி மீது நம்பிக்கை வைக்கின்றனர், சிறப்பாக உழைப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை; அதேசமயம், தமது பராயமடைந்த குழந்தைகளுக்கு உதவ விழையும் முதியோர்கள், ஓய்வு பெறும் வயதிலும் கூட தொடர்ந்தும் வேலை செய்கின்றனர்.

மணமுடித்து ஐந்தாண்டுகள் நிறைவுறாத இளம் குடும்பங்களில் 40 சதவீதத்துக்கும் அதிகமானவை, தமது பெற்றோர்களுடனேயே வசிக்கின்றனர்; 60 சதவீதமானோர் மாத்திரமே தனியே வாழ்கின்றனர். அத்தகைய கூட்டு ஜீவியம் வழமையாக ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்கிறது, மேலும், இக்காலகட்டத்தில்தான் விவாகரத்தும் (சுமார் 40 சதவீதம்) கணிசமாக நடக்கிறது.

வீட்டுவசதிப் பற்றாக்குறையே இதற்கு முதல் காரணம். திருமணம் பதிவு செய்யப்பட்டு 10 ஆண்டுகளுக்குப் பின்னரே ஒரு குடும்பம் தனிப்பட்ட வீட்டை பெறுகிறது என்பது ஒரு விதி.

வீட்டு வசதிப் பற்றாக்குறையே இளம் மக்களின் முக்கியமான பிரச்னையாகும் என்பதை எண்ணற்ற சமூகவியல் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஒரு நபர் சிறப்பாக வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும் வீட்டு வசதி பெறும் வாய்ப்பில் அது செல்வாக்கு செலுத்துவதில்லை. வீட்டு வசதி நிலைமைகளில் அதிருப்தி காரணமாகவே நூற்றுக்கு 70 சதவீதமான இளம் மக்கள் தமது தொழில்களை மாற்றுகின்றனர்.

இக் காரணிகள் யாவும் குடும்பத்தின் இனமரபியல் வளர்ச்சியைப் பாதிக்கிறது, பிறப்பு வீதம் குறைவதற்கும் சிறிய குடும்பங்களே இருப்பதற்கும் விவாகரத்து வீதம் அதிகரிப்பதற்கும் இதுவே காரணம். சமுதாயம் இந்த நிலைமையை மாற்றுவதற்குத் தீர்மானித்திருக்கிறது. சுதந்திர வாழ்வில் பிரவேசிக்கப் போகும் இளம் தம்பதியரின் தொடக்ககால வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கான ஓர் ஸ்தூலமான, சர்வாம்சம் தழுவிய வேலைத் திட்டம் தற்போது வகுக்கப்பட்டு வருகிறது.

''சோட்சிட்டோலோஜிசெஸ்கி இஸ்லெதோவானியா''
சஞ்சிகையிலிருந்து

★

**வாசகருடன் உரையாடல்**

# சோவியத் இளைஞரின் உரிமைகள்

**உங்கள் நாட்டில் மாற்றங்கள் நேர்வது வெளிப்படையான உண்மை. ஆனால், இளம் மக்களைப் பொறுத்தவரையில் உங்களது ஜனநாயகம் இன்னமும் போதுமானதல்ல என்று நான் நினைக்கிறேன். அரச மற்றும் சமூக விவகாரங்களை நடாத்திச் செல்வதில் அவர்களது தினசரி பங்கேற்பு பற்றிய பிரச்னையை எடுத்துக் கொள்வோம்- எந்தவொரு நாட்டிலும் சமுதாயத்திலும் ஜனநாயகத்தின் விஸ்தாரத்தை நிர்ணயிப்பதில் இதுவே முக்கியமான விஷயம். இத்துறையில், இளைஞரின் உரிமைகள் தொடர்பாக சோவியத் யூனியனில் உள்ள நிலைமை என்ன?**

**ஜேகப் சுலைமான்**
**(தன்ஸானியா)**

**சோவியத் அறிஞர் வி. நிகிறப்ஸ்கி இதற்குப் பதிலளிக்கிறார்,**

அரச மற்றும் சமூக விவகாரங்களை நடாத்துவதிலும் கையாள்வதிலும் இளம் மக்களும் அனைத்து சோவியத் மக்களும் பங்குகொள்வதை உறுதி செய்வதற்கு என்னென்ன அரசியல் யாப்பு மற்றும் சட்ட மார்க்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன?

தனிப்பட்ட முறையில் ஒரு பிரஜை என்ற வகையில் அரசு



மற்றும் பொதுவாழ்வு உறுப்புக்களின் செயற்பாட்டில் மேம்பாடுகள் செய்வது தொடர்பான தனது யோசனைகளை முன்வைப்பது மூலமும் தேர்தல்களில் வாக்களிப்பது மூலமும் அல்லது பொதுவாழ்வு ஸ்தாபனங்கள் (கொம்சமோல், தொழிற் சங்கங்கள்), கூட்டுக்கள் (பாடசாலை, மாணவர் மற்றும் உழைப்பு) மூலமும் அரசு மற்றும் சமூக விவகாரங்களைக் கையாள்வதில் பங்குகொள்ளும் அரசியல் யாப்பு ரீதியான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

இந்த உரிமை எவ்வாறு. இளம் மக்களுக்கு உறுதி செய்யப்படுகிறது என்பது பற்றி நான் பேசவிரும்புகிறேன்.

மிகப்பெரிய இளைஞர் ஸ்தாபனமான இளம் கம்யூனிஸ்ட் கழகம் சட்ட முன்முயற்சியை மேற்கொள்ளும் உரிமை படைத்தது என்பதை முதலாகவும் முதன்மையாகவும் வலியுறுத்தியாக வேண்டும். கொம்சமோல் தனது மத்தியக் கமிட்டியின் மூலமாக சோவியத் யூனியத்தின் சுப்ரீம் சோவியத்துக்கும், குடியரசு மட்டத்தில் உள்ள கொம்சமோல் உறுப்புக்கள் யூனியன் மற்றும் சுயாட்சிக் குடியரசுகளது சுப்ரீம் சோவியத்துக்களுக்கும் நகல் சட்டங்களைச் சமர்ப்பிக்க முடியும். சோவியத் சமுதாயத்தினுடைய அரசியல் அமைப்பின் ஓர் தோற்றுவாய்ப் பகுதி என்ற வகையில் அனைத்து அரசியல். பொருளாதார. சமூக—கலாசார விஷயங்களையும் தீர்மானிப்பதில் பங்குகொள்ளும் உரிமை கொம்சமோலுக்கு உண்டு. இளம் மக்களது வேலை, பயிற்சி, வாழ்க்கை மற்றும் பொழுது போக்கு நிலைமைகளை மேம்படுத்தும் நோக்குடைய எண்ணற்ற பல சட்டவாக்கங்களையும் கட்சி, அரசாங்கத் தீர்மானங்களையும் எடுப்பதற்கு அது முன்னோடியாக விளங்கியுள்ளது கொம்சமோல் ஸ்தாபனங்களது பங்கேற்போடு அல்லது ஆரம்ப நிலை ஒப்புதலோடு மாத்திரமே அரசு உறுப்புக்கள் தீர்வு காணக் கூடிய பிரச்னைகள் உள்ளன. சில விஷயங்களில், முகாமையாளர்கள் எடுத்த தீர்மானங்களை நடைமுறைப் படுத்தாமல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் உரிமை அவற்றுக்கு உண்டு.

சோவியத் அரசியல் யாப்பின் கீழ். நாடுதழுவிய விவாதங்களிலும் தேர்தல்களிலும் பங்குகொள்ளும் வாய்ப்பு ஒவ்வொரு இளம் நபருக்கும் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. 1987. ஜூன் 30ம் திகதியன்று. சோவியத் யூனியத்தின் சுப்ரீம் சோவியத். நாட்டு வாழ்வின் பாரிய பிரச்னைகள் குறித்து நாடுதழுவிய விவாதம் நடத்துவது சம்பந்தமான சோவியத் சட்டத்தை அங்கீ

கரித்தது. இச்சட்டம் அத்தகைய விவாதங்களின் ஒழுங்கு முறைமையை முறைமைப்படுத்துகிறது, அரச தீர்மானங்களை வரைவதிலும் அதிகபட்ச அளவுக்குக் கருத்துக்களைத் தெரிவிக்கும் வாய்ப்பையும் உறுதி செய்வதிலும் சட்ட உத்தரவாதங்களை உருவாக்குகிறது.

முன்னரும்கூட, ஒரு சில மசோதாக்கள் நாடுதழுவிய விவாதத்திற்காக அறிமுகஞ் செய்யப்பட்டன. இவ்விதம், 46 பில்லியன் இளம் மக்கள் சோவியத் ஒன்றியத்தின் நகல் அரசியல் யாப்பு குறித்து விவாதிப்பதில் செயல்முனைப்புடன் சம்பந்தப்பட்டனர். உண்மையில், நாட்டின் அடிப்படைச் சட்டத்தை அவர்கள் கூட்டாக வரைந்தனர். ஏறக்குறைய, பாரிய ராஜ்யத் தீர்மானங்கள் சம்பந்தமாக 30க்கும் மேற்பட்ட நகல்கள் கடந்த 25 ஆண்டுகளின்போது நாடுதழுவிய மட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரச மற்றும் பொது விவகாரங்களை நடாத்திச் செல்வதில் பங்கு கொள்வதற்கான இளைஞரின் உரிமை, மக்கள் பிரதிநிதிகள் சோவியத்துக்களுக்கும் ஏனைய தேர்ந்தெடுக்கப்படும் உறுப்புக்களுக்கும் தெரிவு செய்யப்படவும், அவற்றைத் தெரிவு செய்யவுமான சந்தர்ப்பத்தின் மூலமும் உறுதி செய்யப்படுகிறது.

சோவியத் யூனியனின் இளம் பிரஜைகள் 18வது வயதை அடைந்தவுடன் தேர்ந்தெடுக்கும் உரிமையை முதலில் பெறுகின்றனர். ஏனைய பிரஜைகளுடன் சமமான அடிப்படையில், மக்களாட்சி உறுப்புக்களுக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவும், மக்கள் நீதிபதிகளையும் மக்கள் மதிப்பீட்டாளர்களையும் தெரிவு செய்யவுமான உரிமையை அனுபவிக்கின்றனர். கொம்சமோல் ஸ்தாபனங்கள் ஏனைய தேர்ந்தெடுக்கப்படக்கூடிய அரச உறுப்புக்களுக்கும் வேட்பாளர்களை நியமிக்க முடியும். சோவியத் ஒன்றியத்தின் 1977ம் ஆண்டு அரசியல் யாப்பு இளம் சோவியத் பிரஜைகளின் உரிமைகளைக் கணிசமாக வியாபித்தது; இது இளம் மக்கள் மீது கட்சியும் அரசும் வைத்துள்ள நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது இளம் மக்கள் 18 வயது அடைந்தவுடன் ஸ்தல சோவியத்துக்களுக்கு மாத்திரமன்றி, ஒன்றிய மற்றும் சுயாட்சிக் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துக்களுக்கும் தெரிவு செய்யப்பட முடியும்; 21 வயதிலிருந்து (முன்னர் 23 வயது) சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்துக்குத் தெரிவு செய்யப்பட முடியும்.

1989 மார்ச் மாதம் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்துக்கு அதிக எண்ணிக்கையிலான இளைஞர்கள்



மக்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

உழைப்புக் கூட்டுக்களின் பாத்திரம் பிற்காலத்தில் நாடு தழுவிய மட்டத்தில் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. சோவியத் அரசியல் யாப்பின் 8 வது ஷரத்தின் கீழ், அரச, சமூக, உற்பத்தி விஷயங்களைத் தீர்மானிப்பதில் அவற்றுக்கு பரந்த வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய சட்டவாக்கத்துக்கு இசைவாக, உழைப்புக் கூட்டுக்களின் சபைகள் அமைக்கப்பட்டு வருகின்றன, உழைப்பாளர் கூட்டங்களதும் கூட்டு ஒப்பந்தங்களதும் பாத்திரம் அதிகரித்து வருகிறது. ஒரே வார்த்தையில் சொன்னால், சுய-நிர்வாகப் போக்குகள் அடிமட்டத்திலேயே வளர்ச்சியடைகின்றன. அவற்றை வலுப்படுத்துவதில் கொம்சமோலுக்குக் கணிசமான பங்கு உண்டு.

கல்வி நிறுவனங்களிலும் கூட, சுய-நிர்வாகம் வளர்ந்தோங்கி வருகிறது. இப்போது முதல், உயர்கல்வி நிறுவன மற்றும் திணைக்களத்தின் மூத்தோர் அவையில் கால்வாசியினராக மாணவர்களே உள்ளனர். மாணவர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள், சோதனைகள், பரீட்சைகள், போன்றவற்றிலும் டிப்ளோமா ஆய்வுக்களிலும் பங்கு கொள்கின்றனர். மேலும் அவர்கள் இத்துறையில் சீர்திருத்தங்கள் சம்பந்தமாகவும் யோசனை தெரிவிக்கின்றனர். இளம் நிபுணர்களை வேலைக்கு அமர்த்துவது, மானிய பகிர்வு, மாணவர் விடுதிகளை நடத்துவது போன்றவற்றுடன் தொடர்புடைய ஒரு சில உரிமைகளையும் மாணவர்களும் கொம்சமோல் உறுப்பினர்களும் அனுபவிக்கின்றனர்.

அரசு மற்றும் சமூக விவகாரங்களை தீர்மானிப்பதில் இளைஞர்கள் நேரடியாகப் பங்கேற்கும் இதர வடிவங்கள் பலவும் உள்ளன. தேர்ந்தெடுக்கப்படும் தொழிற்சங்க உறுப்புக்களில் 4.3 மில்லியன் இளம் மக்கள் உள்ளனர். அண்மையில் பல்லாயிரக்கணக்கானோர் மக்கள் கண்காணிப்பு உறுப்புக்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர், மக்கள் மதியுரைஞர்களாகவும், பொது ஒழுங்கைக் காப்பதற்கான தொண்டர்களாகவும் பணிபுரிகின்றனர்.


மாதர் சபைகள், சோவியத் கலாசார நிதியம், லெனின் குழந்தைகள் மன்றம், ஆகிய பொதுவாழ்வு ஸ்தாபனங்கள் சமீப ஆண்டுகளின்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இவை, சமுதாயம் முகங் கொடுக்கும் பாரிய கடமைகளுக்குத் தீர்வுகாண்பதில் பங்களித்திட இளம் மக்கள் முன், கொம்சமோலின் முன் புதிய வாய்ப்புக்களைத் திறந்து வைக்கின்றன.

இளம் மக்களுக்கு உரையாற்றிய மிகையில் கொர்பச்சேவ் பின்வருமாறு கூறினர்:

சோஷலிஸ ஜனநாயகத்தின் எதிர்காலம் பொருளாதாரம், விஞ்ஞானம், கலாசாரம் ஆகியவற்றிலும் அறிவுத்துறை வாழ்விலும் போட்டாப் போட்டி பொறியமைவின் வளர்ச்சியுடனும் எல்லா மட்டங்களிலும் சுயாட்சியை விரிவுபடுத்துவதுடனும் ஒவ்வொரு தனிநபரது சொந்த முன்முயற்சியின் பாத்திரத்தை அதிகரிப்பதுடனும் தொடர்புபட்டிருக்கிறது. நீங்கள் மக்களின் இறைமையினது அனைத்து கருவிகளையும் பிரயோகிக்கவும் தேசத்தை மேலும் ஜனநாயகமாக்குவதற்கு உங்களின் இளமைச் சக்தியை இடவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

அச்சகம்: பிரகதி அச்சகம், 93, மாளிகாகந்த வீதி, கொழும்பு



பிரகதி அச்சகம், 93, மாளிகாகந்த வீதி, கொழும்பு-10.